# யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
# பழைய மாணவர் சங்கம், கொழும்பு






1993 - 2018


# ஸ்கந்தா மைந்தர்களின் சங்கமம்
# 2018





## வெள்ளிவிழா மலர்




BSN TRADERS

# Be Es En Traders

**Suppliers of :** CTP, CTCP, PS Plates & Chemicals, Offset & Web Inks, Photo Papers, Synthetic Papers, Digital Off Set Media, Large Format Media & All Other Printing Requisites

EG1, CENTRAL ROAD, COLOMBO-12, SRI LANKA.
Tel : 0094-11-2348418, 2348419, 2387924, 2330297
Fax : 0094-11-2449809 E-mail : bees@sltnet.lk

TechNova
Full Spectrum, Single Source

"உண்மையே உயர் அறம்"

# யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

## பழைய மாணவர் சங்கம், கொழும்பு

## (1993 - 2018)

## வெள்ளிவிழா மலர்

## ஸ்கந்தா மைந்தர்களின் சங்கமம்

## 2018

# J/Skandavarodaya College

## O.S.A. - Colombo

## 25th Anniversary Celebrations

## SANGAMAM - 2018

## 07.07.2018

# வெள்ளி விழா

## ஸ்கந்தா மைந்தர்களின் சங்கமம் – 2018

## நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| இடம் | : | பம்பலப்பிட்டி சனசமூக நிலைய மண்டபம் |
| காலம் | : | 07.07.2018 சனிக்கிழமை, மாலை 5.30 மணி |
| தலைமை | : | திரு. இ. இராஜவிஜயன்<br>(தலைவர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி<br>பழைய மாணவர் சங்கம், கொழும்பு) |
| பிரதம விருந்தினர் | : | ஸ்கந்தவரோதயன் திரு. சு. பத்மநாதன் |
| சிறப்பு விருந்தினர் | : | கௌரவ த. சித்தார்த்தன் (பா.உ)<br>திரு. க. புவனேந்திரநாதன்<br>திரு. K. சிவாஜி<br>திரு. V. நந்தீஸ்வரன்<br>திருமதி T. யோகேஸ்வரன்<br>கலாநிதி ந. தணிகாசலம்பிள்ளை |

"சங்கமம் - 2018" - வெளியீடு

ஆசிரியர் கௌரவம்

கலைநிகழ்ச்சிகள்

# சமர்ப்பணம்

கல்லாய் இருந்த எம்மை
கல்வி என்ற உளி கொண்டு
பல் துறை சார் நிலையில்
பரவலாக நிபுணராக்கி
கலைகளில் லீலை செய்து
கலைஞனாய் களித்து நிற்கும்
கற்றவர் சபை தனில்
மற்றவர் போற்றி நிற்கும்
படைத்தவன் சந்நிதியில்
பாமாலை பாடி நிற்கும்
சிற்பமாய் செதுக்கி வைத்த நல்லாசிரியர்
அவர்தம் பாதக் கமலங்கட்கு
நன்றியுடன் சமர்ப்பணம்.

# ஸ்தாபகர் துதி

மனிதம் தழைத்திட மாநிலம் ஓங்கிட
மாசிலாச் சிந்தனையாளன்
புனிதமாய்க் கருதிய இனிதான கூடமே
பூரித்து நிற்கும் திரு மாடம்
கனிவான மழலைகள் வளமோடு கல்வியைக்
கசடறக் கற்க எழி லாய்
ஸ்கந்தவ ரோதயக் கலைக்கோவில் நிறுவிய
கந்தைய வள்ளல் வாழ்க!
நிலையாக மருவிய கலையமுது பொங்கிட
நியமகுரு வடிவமைத்த
நீளவே விளைந்திடும் வாழும்கொ ழும்புவாழ்
நிகழ்பழைய மாணவர் சங்கம்
தலையாய பணியாகத் தந்தையாம் கந்தையத்
தலைவனின் சிலைசமைத் தே
தாளாத கீர்த்தியொளி வளரமணி ஒலித்திடத்
தாபகர் என்றும் வாழ்க!

**ஆசிரியர் : கே. எஸ். சிவஞானராஜா**
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
சுன்னாகம்

# OUR BELOVED FOUNDER



LATE S. KANDIAH UPATHIYAYAR
(1870 - 1953)

தருமலிங்கம் சித்தார்த்தன், பா.உ.,
(யாழ் மாவட்டம்)
ධර්මලිංගම් සිද්ධාර්ථන් පා.ම.,
(යාපනය දිස්ත්‍රික්)
Dharmalingam Sithadthan, M.P.,
(Jaffna District)

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

16,Haig Road,
Colombo - 04.
Sri Lanka.
Tel: +94 11 258 6289

# ஸ்தாபகர் குடும்பவத்தவரின் வாழ்த்துச் செய்தி

## திரு. தருமலிங்கம் சித்தார்த்தன் (பா.உ), யாழ். மாவட்டம்



எங்கள் கல்வித்தாய் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கமானது தனது 25வது அகவையை கொண்டாடும் இவ்வேளையில் அதனை வாழ்த்துவதில் ஸ்கந்தவரோதயனாக நானும் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

எங்கள் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கம் கடந்த 25 வருடங்களாக தொடர்ந்து இயங்கி வருவதோடு, கல்லூரியின் வளர்ச்சியில் பல்வேறு வகைகளிலும் உறுதுணையாயிருந்து வருவது கல்லூரிச் சமூகத்திற்கு பெருமையானது.

ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது வடமாகாணத்தின் கல்வி மட்டம் மிகவும் தாழ்ந்த நிலையிலேயே உள்ளதை பெறுபேறுகள் சுட்டி நிற்கின்றன. யுத்தத்தின் விளைவென மட்டும் இதனைக் கொள்ள முடியாது. இதற்கான உண்மையான அடிப்படைக் காரணிகள் துறைசார் நிபுணர்களினால் இனங்காணப்பட்டு அவற்றை சரிசெய்வதன் மூலமே மீண்டும் எங்கள் கல்விவளத்தை பலமான நிலைக்கு கொண்டுவர முடியும். கல்வியோடு உளவியல், கலை-பண்பாடு, விளையாட்டு துறைகளிலும் மாணவர்களுக்கு ஈடுபாட்டை வளர்ப்பதனூடாகவே ஒரு ஆரோக்கியமான, வளமான சமுதாயத்தை உருவாக்கலாம்.

இன்றைய சூழ்நிலையில் பழைய மாணவர்கள் சங்கங்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு பாடசாலையின் கல்வித்தரத்தை உயர்த்தவும். கல்விசாரா திறமைகளை வளர்க்கவும். பௌதீக வளங்களை பெற்றுத் தருவதிலும் பெரும் பங்காற்றி வருவதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

வெள்ளிவிழாக் காணும் எங்கள் ஸ்கந்தா கொழும்பு பழைய மாணவர் சங்கம் வளர்ச்சியடையவும் சங்கத்தின் பணி மென்மேலும் சிறப்புறவும் வாழத்துகின்றேன்.

நன்றி.

**த. சித்தார்த்தன்**
(ஸ்கந்தவரோதயன்)

# "ஸ்கந்தாவின் கந்தன்"



அறிவழகும், அருளொழியும் கலந்து பண்பாட்டு கலாசார மேம்பாட்டில் உயர்ந்து விளங்குவது யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி. அருளும், நல்லோர் மனங்களும் சேர்ந்தால் எக்கருமமும் சித்தியாகும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குவது இக் கல்லூரியும், இங்கு வீற்றிருந்து அருள்பாலிக்கும் கந்தனும் என்று சொன்னால் மிகையாகாது. ஆரம்பத்திலிருந்து நிழற்பட வழிபாடு, மேல் வழிபாடாகி இன்று நற்கோயிலாக வளர்ச்சியடைந்துள்ளதோடு ஒழுங்கான பூசை, விழாக்கள் நடைபெற்று மாணவர்களின் ஆன்மீக வளர்ச்சிக்கும் உந்துகோலாக விளங்குகின்றது.

இத்திருக்கோயில் அமைவதற்கு கலாநிதி. திரு. ஆறுதிருமுருகன் அவர்களும், ஏனைய நல்லுள்ளங்களும் அரும்பாடுபட்டனர் என்பது யாவரும் அறிந்ததே. இதற்கு கொழும்பு பழைய மாணவர் சங்கம் முழுமையான ஆதரவையும். பங்களிப்பையும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. பாடசாலை வளர்ச்சியோடு கோயில் வழிபாடும் வளர்ச்சி கண்டது. இப்பாடசாலையில் கல்வி பயின்ற பல மாணவர்கள் நல்லுயர்வு பெற்று நல்வாழ்வு வாழ்கின்றனர்.

நல்வாழ்விற்கு கல்வி, அறிவு மட்டுமன்றி ஆன்மீக அறிவும் தேவை. இவ்விரண்டும் சேர்ந்தால்தான் வாழ்வு முழுமைபெறும் என்பதற்கமைய விளங்கும் ஸ்கந்தவரோதய கல்விக் கூடமும், அங்கு திருவருள் பாலிக்கும் கந்தக் கோட்டமும் மேலும் வளர்ச்சிபெற ஆசி கூறுவதோடு கொழும்பு ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம் 25ம் ஆண்டில் நல்வளர்ச்சி பெற வாழ்த்துவதோடு மற்றும் அதிபர், ஆசிரியர்கள், மாணவச் செல்வங்களுக்கும் ஏனையோருக்கும் கந்தனின் பரிபூரண அருள் கிடைக்க வாழ்த்துகின்றேன்.

"அருள் பெருகி நலம் பெறுக"

**இ. சோமேஸ்வர சர்மா**

# பிரதம விருந்தினரின் வாழ்த்துச் செய்தி

## வெள்ளிவிழாக் காணும் கொழும்பு ஸ்கந்தவரோதய பழையமாணவர் சங்கம்



125 ஆண்டை நோக்கிய எமது கல்லூரியின் பயணத்தில் கொழும்பு பழைய மாணவர் சங்கமாகிய நாங்கள் எங்கள் 25 வருட கல்லூரியின் ஊடான உறவைக் கொண்டாடும் முகமாக இவ் வெள்ளி விழா மலரினை வெளியிட்டு "ஸ்கந்தா மைந்தர்களின் சங்கமம் - 2018" என்ற நிகழ்வினை இன்று கொண்டாடுகின்றோம்.

கொழும்பு பழைய மாணவர் சங்கமானது 13 வருடங்களுக்கு பிறகு 1993 ஆண்டு மீள் கட்டமைக்கப்பட்டது. அன்று முதல் இன்று வரை 25 வருட காலம் நாங்கள் பாடசாலை மற்றும் மாணவர்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக உலகளாவிய ரீதியில் வாழும் ஸ்கந்தவரோதய பழைய மாணவர்களின் அனுசரணையுடன் அயராது பாடுபட்டு வருகிறோம்.

எமது இப் பணிக்கு அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தாரின் பங்களிப்பும் அளப்பரியது. இச் சந்தர்ப்பத்தில் அனைவரையும் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

13 வருடங்கள் சில பல காரணங்களால் இயங்காமல் இருந்த எமது சங்கத்தை மீள் கட்டமைப்பு செய்து இனி வரும் காலங்களில் தடங்கல் இன்றி செயல்படுவதற்கு நிதி மற்றும் ஏனைய வளங்களையும் உருவாக்கியுள்ளோம்.

இங்கு வருகை தந்து இருக்கும் ஸ்கந்தா மைந்தர்கள், அதிபர், ஆரம்பப் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களிடம் இச் சந்தர்ப்பத்தில் தாழ்மையான வேண்டுகோள் ஒன்றை முன் வைக்க விரும்புகிறேன். 125 வருடப் புகழ் பெற்ற எமது பாடசாலைக்கு சேவை செய்வதற்கு கொழும்பு பழைய மாணவர் சங்கம் எப்போதும் தயாராக உள்ளது. எங்களுடன் கைகோப்பதற்கு இளைய சமூகம் ஆகிய உங்களை அன்புடன் அழைக்கிறோம். 25ம் வருடம் பூர்த்தி செய்த நாங்கள் எங்கள் சங்கத்தின் ஊடாக எதிர்கால சந்ததியினருக்கு சேவை செய்வதற்கு உங்களை அழைக்கின்றோம்.

**சு. பத்மநாதன்**
நிர்வாக உறுப்பினர்

# யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி கொழும்பு பழைய மாணவர் சங்கத் தலைவரின்

# வாழ்த்துச் செய்தி



சுன்னாகம் கந்தரோடையில் அமைந்து ஸ்கந்தப்பெருமான் அருளினால் சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கம் தொடர்ச்சியாக 25 வருடங்களுக்கும் மேலாக பல்வேறு பணிகளையும் ஆற்றியமையை நினைவு கூரும்முகமாக இச்சிறப்பிதழ் வெளிவருவதையிட்டு சங்கத்தின் ஆரம்ப கால ஆயுட்கால உறுப்பினராக பெருமகிழ்வு கொள்கிறேன்.

1941ம் ஆண்டு பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டும் சில வருடங்கள் இயங்கியும் பின்னர் மீள் புதிப்பிக்கப்பட்டும் பின் வந்த காலங்களில் செயலற்றும் போனதாக வரலாறுகள் கூறுகின்றன. அவ்வாறு ஆயின் எமது சங்கத்திற்கு தற்போது 75 வருடங்கள் ஆகிறது.

ஸ்கந்தா அன்னையின் பெருமை மிகு மாணவர்கள் பலர் இன்று தலைநகரில் உயர் பதவிகளில் இருப்பதோடு மட்டுமல்லாது எமது பழைய மாணவர் சங்க உறுப்பினர்களாக தாம் கற்ற பாடசாலைக்கு பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிகின்றமை போற்றுதற்குரியது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி, ஆரம்பப் பாடசாலை ஆகியவற்றிலிருந்து தலைநகருக்கு போட்டிகளில் பங்குபற்றுவதற்காக வருகை தரும் மாணவர்களுக்கு உணவு, தங்குமிடம் போன்ற வசதிகளை எமது சங்கம் மன நிறைவோடு ஏற்பாடு செய்து தருகின்றது. அகில இலங்கை தமிழ்த் தின போட்டிகளில் மேடை நாடகம் தொடர்ச்சியாக 1ம் இடம் பெற்ற போதெல்லாம் அதனை மேடையேற்றுவது மட்டுமல்லாது போட்டியாளர்கள் ஆசிரியர்கள் ஆகியோரை கௌரவிக்க எமது சங்கம் தவறவில்லை.

ஒரேற்றர் புலமைப் பரிசில் நிதியம், ஆரம்பப் பிரிவு நிதியம் போன்றவற்றினூடாக கல்வியில் திறமை காட்டும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படுகிறது. க.பொ.த. உயர்தர தொழில்நுட்ப முறையில் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்ற எமது கல்லூரி மாணவனையும் ஆசிரியர்களையும் கொழும்புக்கு அழைத்து அவர்களுக்குரிய கௌரவைத்தை எமது சங்கம் வழங்கியது.

அறிவு, திறன், மனப்பாங்கு, விழுமியம் சார் நற் பண்புகளை மாணவர்களுக்கு வழங்கி நாட்டின் சிறந்த நற்பிரஜைகளாக உருவாக்கி வரும் செயற்றிறன் மிக்க எமது அதிபர்களையும், அறிவு சார் ஆசிரியர்களையும், கல்லூரி ஊழியர்களையும் பாராட்டுவதில் நான் உவகையடைகின்றேன்.

கல்லூரியின் ஸ்தாபகர் கல்லூரியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வழிகாட்டிய மேன்மைமிகு ஸ்தாபகர் முகாமையாளர்கள், முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் நினைவு கூர்வதோடு எமது சங்கத்தின் சார்பில் கல்லூரிச் சமூகம் அனைவருக்கும் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இ. இராஜவிஜயன்**

# யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
# கொழும்பு பழைய மாணவர் சங்கச் செயலாளரின்
# வாழ்த்துச் செய்தி



"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல் பின்னர் உள்ள கருமங்கள் யாவும் பேர் விளங்க ஒளிர நிமிர்த்தல் அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு அறிவுறுத்தல்"

என்றார் உலகிற்கொரு புதுமைக் கவி பாரதி. இந்த அருமையான வாக்கிக்கமைய ஆயிரமாயிரம் நன் மாணாக்கர்களை உருவாக்கி நூற்றாண்டை கடந்து வெற்றி நடை போடுகிறது. "எமது அன்னை ஸ்கந்தவரோதயக் கல்லூரி" அதேபோல் கல்லூரியின் கொழும்பு மாணவர் சங்கத்தினரும் இவ்வாண்டு தமது வெள்ளி விழாவை விமர்சையாகக் கொண்டாடுகிறார்கள்.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக எமது சங்கம் கல்லூரியின் கல்வி, விளையாட்டு போன்ற பல்வேறு தேவைகளுக்காக கல்லூரிக்கு உறுதுணையாக நின்று பல்வேறு உதவிகளை புரிந்து வருகிறது. எதிர் காலத்திலும் புரியும் என்று இந்த வெள்ளி விழா ஆண்டில் உறுதி எடுப்போம் வெற்றி பெறுவோம்!

இதற்காக கடந்த காலத்தில் கடமையே கண்ணாக உழைத்த முன்னாள் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள், உட்பட அனைவரையும் மனமார வாழ்த்துவதுடன் வருங்காலத்தில் இதை விடச் சிறப்பாக செயலாற்றப் போகும் அனைத்து நல்லுள்ளங்களையும் வாழ்த்தி வரவேற்கிறேன்.

மேலும் "ஸ்கந்தா மைந்தர்களின் சங்கம் - 2018" வெள்ளி விழா சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற எல்லாம் வல்ல நல்லிறைவனை இறைஞ்சுகிறேன்!

"வாழ்க எமது சங்கம்! வளர்க அதன் பணிகள்!

கலாபூஷணம்
**ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன்**

## யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
## கொழும்பு பழைய மாணவர் சங்கப் பொருளாளரின்
# வாழ்த்துச் செய்தி



நூற்றாண்டு கடந்து புகழ்பூத்து விளங்கும் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், கொழும்பு தனது வெள்ளிவிழா ஆண்டைக் கொண்டாடும் இத்தருணத்தில் அதன் பொருளாளராகப் பணியாற்றும் அரிய சந்தர்ப்பம் கிடைத்ததை எண்ணி மிக்க மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகிறேன்! தொடர்ந்தும் என்னாலியன்ற பணிகளை எனது கல்லூரிக்கு வழங்குவேன் என்பதையும் இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் எனது தந்தையார் அமரர் கா. துரைசிங்கம் அவர்கள் அன்னை ஸ்கந்தாவின் ஆசிரியராகக் கடமையாற்றியதும் அன்னாரது மக்கள் அனைவருமே ஸ்கந்தாவில் கல்வி கற்று இன்று நல்ல நிலையில் இருப்பதும் ஸ்கந்தாவினால் தான் என்பதை நாம் ஒரு நாளும் மறவோம்.

நாட்டின் அரசியல் நிலைமைகளால் சற்று தொய்வுற்றிருந்த எமது கல்லூரி மீண்டும் தலை தூக்கி சாதனைகள் புரிந்து வருவது பெருமைக்குரிய விடயமாகும்.

பல்வேறு நாடுகளிலும் பணிபுரியும் ஸ்கந்தாவின் மைந்தர்கள் ஒன்று கூடி உதவிகள் புரிந்தால் ஸ்கந்தா மீண்டும் பெருமைமிகு பொறியியலாளர்களையும், சிறந்த வைத்திய நிபுணர்களையும், திறமைமிகு சட்டத்தரணிகளையும், உலகம் போற்றும் விஞ்ஞானிகளையும், நல்லாசிரியர்களையும் உருவாக்க முடியும் என்பது திண்ணம்.

அந்தப் பொற்காலம் வெகு தொலைவில் இல்லை என்பதே நிதர்சனமான உண்மை!

ஸ்கந்தாவின் புதல்வன்
**துரைசிங்கம் குமார்**

# ஸ்கந்தா அன்னையின் வாழ்த்து



வரலாற்றுச்சிறப்புமிக்க யாழ் மாவட்டத்தின் சுன்னாகம் கந்தரோடை கிராமத்தில் கல்விச் சிந்தனையையும். ஏழைச் சிறுவர்களின் கல்விக்கு அத்திவாரம் இட்டு உயர் கல்விக்கு இட்டுச் செல்லக்கூடிய கல்விக்கூடமாக உயர் நிலைக்கு கொண்டு வருவதற்கு ஸ்தாபகர் கந்தையா உபாத்தியாரின் சிந்தனையில் எழுந்த கலங்கரை விளக்கே "ஸ்கந்தா" ஸ்கந்தாவின் பிதாமகராக விளங்கிய கந்தையா உபாத்தியாயரின் கல்விச் சேவையில் உருவாகிய பழைய மாணவர் இன்று கொழும்பு மாநகரின் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவான வெள்ளி விழாவை கொண்டாடுவதையிட்டு ஸ்கந்தா அன்னை அக மகிழ்வு அடைகிறாள். உலகெங்கும் வியாபித்திருக்கும் ஸ்கந்தவரோதயன்கள் தாங்கள் வசிக்கும் நாடுகளில் ஸ்கந்தாவின் புகழையும் பரப்பி தன்னிகரல்லா சேவையை மாணவர்களுக்கு வழங்கி வருகின்றனர். அந்த வகையில் இலங்கையின் தலைநகரில் (கொழும்பு) ஸ்கந்தாவின் புகழுக்காகவும். அதன் வளர்ச்சிக்காகவும் தங்களை கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினூடாக இணைத்து. செயற்படுவதுடன் ஸ்கந்தாக்கு பெருமை சேர்க்கிறது. மேலும் பழைய மாணவர் சங்கம் ஸ்கந்தாவின் ஆலய புனர்நிர்மாணம். புலமை பரிசில் நிதிகள், தேசிய மட்டப்போட்டியிலும் பங்குபெற்றும் ஆசிரியர். மாணவர்களுக்கு தேவையான இருப்பிட வசதிகள் உணவு வசதிகள், கௌரவிப்பு, மருத்துவமுகாம் என்பவற்றை செய்து வருகின்றது. இச்செயற்பாடுகள் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் உயரியல் சார்பிலுள்ள பற்றுறுதியை காட்டி நிற்கின்றனர். இவ்வாறான செயற்பாடுகளில் தங்களின் அர்ப்பணிப்பான சேவையை வழங்கி வரும் கொழும்பு ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம் தனது இருபத்தைந்து ஆண்டு கால சேவையை நிறைவு செய்து வெள்ளிவிழாவை கொழும்பு மாநகரில் சிறப்பாக மலர் வெளியீட்டுடன் கொண்டாடுவதையிட்டு கல்லூரிச் சமூகத்தின் சார்பிலும் எனது சார்பிலும் மகிழ்வான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

"ஸ்கந்தா அன்னையின் புகழ் எங்கும் பரவ
ஸ்கந்தப்பெருமானை பிரார்த்திக்கின்றேன்."
"உண்மையே உயர் அறம்"

**M. செல்வஸ்தன்** S.L.T.S-1
அதிபர்,
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

# FORMOST SKANDA AND ITS COLOMBO OSA



I feel much pleasure in giving a word of appreciation and gratitude to the Skanda OSA – Colombo as The foremost supportive hand to Skandavarodaya College and Skandavarodaya Primary School.. The Skanda society ever considers the two schools as THE ONE even though the Primary Section is administratively separated in 2010 under a government scheme. Anyhow the Skanda OSA – Colombo is continuously rendering financial sponsor to school functions and further they often encourage the growth and development of the school activities. The physical and educational enhancement of our school depends on the eyesight of the old students. After my arrival to Skanda Primary School I attended a couple of times to Colombo get together. One was The Annual General Meeting and the other was The Inauguration of the Skanda Trust Fund. In these two visits I indeed gained much experience and excitement of the extreme activities of the Skanda OSA – Colombo. After my first speech I was able to get a new computer set to our school and now it is used to train our little students. Skandavarodayan Mr. S. Mahendran donated his Computer on our prize day 2017 through Skandavarodayan Mr. T. Kumar who was the Chief Guest of the occasion.

Another Skandavarodayan Lion Mr. Gnanavel renovated the front path from the entrance to the new main premises. This path was slippery during the winter season and the staff and students had to face much inconvenience. Furthermore we seek support from well-wishers to renovate the courtyard too.

When I was appointed as The Principal of Skanda Primary School, Skandavarodayan Mr. Rajavijayan contacted me over the phone and wished me. Further he promised me that The Skanda OSA – Colombo would always be helpful on any request made by us. He also impressed the unity of the two schools. Mr. Rajavijayan often inquires me about the school activities and the necessary needs. The Skanda OSA – Colombo annually sponsors the merit students of the four main subjects Tamil, Mathematics, Environmental Studies and English and they award the scholars and those who scored over 100 marks at the scholarship Examination. They award these students with cash prize and this prize encourages the students with their saving schemes.

Now a peaceful study situation is going on in the Skanda Square and the two schools work together whenever necessary. We go hand in hand with the functions and the resources available to achieve the maximum benefits for the sake of the students. For an example the 2018 sports festival of the primary school was held in the Skanda grounds and it was appreciated by many skandavarodayans. This decision caused less expenditure to the primary school. As far as the resources are concerned it is always fruitful for the primary school to share with the secondary school. This time we handed over the leaving documents of our primary level completed students directly to the secondary school administration. Now we work hard to enhance the scholarship results and hand over the students with highly achieved performance.

This is possible because of the friendly administration of the Secondary School. In this place I like to express my sincere thanks to skandavarodaya College for the support they render when and where necessary.

This year we have 58 students in the grade 5 scholarship classes. Two dedicative, efficient and hard working teachers coaching the classes with the aim of lifting up the whole students for over 70 marks. This is our first target. The second target is to increase the percentage of the scholars and to send all the grade 5 completed students with the highly achieved educational performances. The Skanda OSA- Jaffna annually sponsors to the extra classes conducted by some expert resources.

We also get help from the parents of the primary students in various activities through SDC. They physically and financially support to the Prize Day and The Sports Day and some school level occasions especially The Siramadana Day, Teachers Day, Kalkol Vizah, Children's Day and Navarathri festival.

In this 2018th year The Skanda OSA- Colombo celebrates its 25 year Silver Jubilee Day. This Association has been playing the major role to any development scheme of the Skanda. I pray Skandaperuman to bless The Association and live long. I wish the association good luck and the members to continue their dedicative service forever.

Thank You.

**Mr. Ponnampalam Thayananthan**
The Principal,
J/ Skandavarodaya Primary School.

"எண்ணிய முடிதல் வேண்டும்!
நல்லவே எண்ணல் வேண்டும்!
திண்ணிய நெஞ்சம் வேண்டும்!
தெளிந்த நல்லறவு வேண்டும்!"

*- புரட்சிக்கவி பாரதி -*

# "எனது அன்னை ஸ்கந்தா"



எல்லாம் வல்ல எமது கல்லூரி அன்னையின் ஸ்கந்தபெருமான் திருவருளால் எழிலுடன் விளங்கும் ஸ்கந்த வரோதயக் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தில் வெளியாகும் இச் சிறப்பு மலருக்கு ஒரு வாழ்த்துரை வழங்குவதில் பெரும் மனநிறைவு கொண்டுள்ளேன். "உறவென்றும் நீயே உண்மையோடுனக்காய் உழைத்திடுவோமென்றும் நாமே" என்ற உயரிய நோக்குடன் விளங்கும் கொழும்புப் பழைய மாணவர் சங்கத்தினரின் இருபத்தைந்து ஆண்டுகள், அன்னை ஸ்கந்தாவுக்கு ஆற்றிய அரும் பெரும் சேவைகளை நினைவு கூர எனக்கும் ஒரு சந்தர்ப்பம் அளித்த வெள்ளி விழா மலர் வெளியீட்டுச் சபையினருக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

உலகின் பல பாகங்களிலும் தமது அன்னையை மறவாத நினைவுடன் பல பழைய மாணவர் சங்கத்தினரின் அரும் பெரும் சேவைகளையும் எம்மால் மறக்க முடியாது. எனினும் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினரின் மகத்தான சேவைகளை என்றும் மறவாத உள்ளங்களை எவராலும் போற்றாமல் இருக்கவே முடியாது. யான் இக்கல்லூரியில் ஆண்டு 4 தொடக்கம் ஆண்டு 13 வரை கல்வி கற்ற காலப் பகுதிகளை மறக்க முடியாது. மாணவப் பருவம் முடிந்த பின் அன்னையின் அரவணைப்பினால் 1973ஆம் ஆண்டு தொடக்கம் 1996 ஆண்டு வரை உதவி ஆசிரியராக, பகுதித் தலைவராக, பிரதியதிபராக, பதில் அதிபராக கடமையாற்றிய பின் இளைப்பாறும் வரை அன்னையின் சொந்த மண் என்று உரிமை கோரும் எண்ணம் கொண்ட என் சேவை கொழும்பு மாணவர் சங்கத்திலும் ஒரு சில ஆண்டுகள் தொடர்ந்தது. இக் காலப் பகுதிகளில் இக் கல்லூரியின் அதிபர்களால் வேண்டப்பட்ட தேவைகளை எல்லாம் எமது சங்கம் பரிபூரணமாக நிறைவேற்றியதை யான் நன்கறிவேன்.

கந்தனுக்கு ஓர் ஆலயம் கலைவாயில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் அமையப் பெற்றதும் எமது பழைய மாணவரின் முயற்சியினால் என்பதை மறக்க முடியாது. இவ்வாலயம் கல்லூரியின் வாசலின் முகப்பு தோற்றத்தை மேலும் ஒளிரச் செய்வது ஸ்கந்தப் பெருமானின் திருவருள் என்றே கூற முடியும். ஸ்கந்தாவில் நடைபெறும் விழாக்களின் சிறப்புக்களுக்கெல்லாம் ஆலயத்தில் நடைபெற்று வரும் பூசைகளே முதற் காரணம் எனக் கொள்ள முடியும்.

எமது கல்லூரிக்கு பல அதிபர்கள் அரிய பல பணிகளை ஆற்றிச் சென்றுள்ளனர். தற்போதைய அதிபர் திரு. மு. செல்வஸ்தன் அவர்கள் கல்லூரி அன்னைக்குத் தன்னாலான சிறந்த சேவையை ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது. இவர் எனது மாணவர் என்பதை மகிழ்வுடனும் பெருமையுடனும் குறிப்பிட விரும்புகிறேன். முன்னாள் புகழ் பூத்த அதிபர்கள் வரிசையில் இவரும் இடம் பெறுவார் என்பதில் ஐயமில்லை. இவரின் சேவைக்கும் கல்லூரியின் எதிர்கால வளர்ச்சிக்கும் எமது கொழும்பு பழைய மாணவர் சங்கம் என்றென்றும் ஆதரவு நல்கி ஒத்துழைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

"வாழ்க! வாழ்க! வாழ்க! வளரிள மதியெனவே வாழிய எங்கள் கல்லூரி" என வாழ்த்தி ஸ்கந்த பெருமானைப் பணிந்து வணங்குகிறேன்.

**கனக. புவனேந்திரநாதன்**

ஓய்வு நிலை முன்னாள் பதில் அதிபர்.


With Best Compliments
Flustaph 250MG 500MG
Flucloxacillin Sodium BP
Flustaph -500
ORION
Xindal 150mg 300mg
Clindamycin USP
Xindal-300
ORION
Darley Butler & Co.Ltd
Health Care Division
ORION
Pharma Ltd
In Search of Excellence

## J/SKANDAVARODAYA COLLEGE OLD STUDENTS ASSOCIATION - COLOMBO
## EXECUTIVE COMMITTEE - 2017/ 2018



Seated (Left to Right)

Dr.A.Shakthevale(Vice President), Mr. K. Eraivan ( Vice President), Mr. T. Kumar (Treasurer), Mr. R. Rajavijayan (President), Mr. A. R. Balasridharan (Secretary), Mr. S. Pathmanathan (Vice President), Mr. S. Mahendran (Vice Presidant), Mrs. S. Yogarajah ( Vice President)

Standing (Left to Right)

Mr. T. Vaseetharan (Assistant Treasurer), Mr. V. Vazavan, Mr. T. Kugadas , Mr. M. Sathananthan (Assistant Secretary), Mr. K.S.Mahendran, Dr. K. Sivkumar, Mr. S. P. Sivagnanam, Mr. S. Nesenthiran, Mr. M. Sukumaran, Mr. M. JeyaPragash

Absent Dr.N.Mohanrajah

## SKANDAVARODAYA COLLEGE OLD STUDENTS ASSOCIATION, COLOMBO
## EXECUTIVE COMMITTEE (2014-2015)



**SEATED** ***(Left to Right)***

Mr. M.V. Vazavan *(Vice President)*, Dr.A. Shakthevale *(Vice President)*, Mr. Sethu Vipulananda *(Vice President)*, Mr. M. Sukumaran *(Secretary)*, Dr. K. Sivakumar *(President)*, Mr. P. Anandarajan *(Treasurer)*, Mr. S. Pathmanathan *(Vice President)*, Mr. Karunainainthan *(Vice President)*, Mrs. S. Yogarajah.

**STANDING** ***(Left to Right)***

Mr. A. R. Balasiridaran, Mr. S. Mahendran, Mr.S. Selvakumar *(Asst.Treasurer)*, Mr. M. Sathananthan , Mr. T . Ariyaratnam, Mr. R. Rajavijayan *(Asst. Secretary)*, Mr. K Eraivan, Mr. S. P. Sivagnanam, Mr. M. Dhayalan

**ABSENT**

Mr .T . Kugadas

# SKANDA

I consider it a great privilege to write an article about Skanda to the souvenir since I have had long acquaintances with Skanda. The maximum school life for a student is thirteen years but my acquaintance with Skanda was nearly a quarter century. The souvenir is released by Colombo OSA to commemorate the 125th anniversary of the founding of an institution which has rendered yeomen service to provide quality education to many generation of boys and girls of the north.

The principal's chair of Skandavarodaya College was adorned by a galaxy of men of great calibre. I was very fortunate to sit in that chair for 12 years as a principal, six years less than Orator Subramaniyam who served 18 years as a principal.

Skandavarodaya College, of all the colleges in the Jaffna peninsula is peculiarly a school of the people. She drew her pupil from every part of the peninsula almost from her foundation. Young men who wanted English education gravitated towards Kandarodai and found welcome there. Skanda provided free education long before Sri Lanka has heard of Dr.C.W.W Kannangara. A director of education once mentioned about the growth of Skandavarodaya College as the phenomenal rise of the institution from a school of 245 students, 5 teachers, 13 classrooms of 1943 to a super grade school of 2045 students, 57 teachers and 61 classrooms. The village school in Kandarodai blossomed forth into a super grade school. In 1963, forty three students entered the University of Peradeniya and the said students were celebrating Skanda day at Peradeniya University during their period. The name Skandavarodaya College was put up in the educational map of Sri Lanka. Skanda was an asylum for a number of students who were failures and were refused admission in other schools. They completed their studies successfully and became eminent persons in various walks of life.

School is after all not entirely about teaching or studies. It is also about the kind of values which one can imbibe both from the school as an entity as well as the teachers who make up the collective entity, wherever the skandavarodayan are, they shine on all walks of life and have brought special flavour in keeping to their traditions and adhering to good customs and manners. Mother Skanda is proud to witness her sons in elevated positions not only in Sri Lanka but also worldwide. For instance Dr. Vaithilingam Thuraisamy who is a space scientist is an old boy of Skandavarodaya College. United State of America's Appolo XI Mission landed first three men on moon. Behind this great victory, there were many scientists whose contribution was marvellous. Dr.V. Thuraisamy was one among the scientists who toiled hard to send the Apollo XI Mission to moon. For Mr.V.Thuraisami's advancement in science, Skanda laid the foundation. He attended Skanda from a small village Kuppilan.

He visited Skandavarodaya College in 2003 when I was a principal. He made an address in the morning assembly and made his comment about the standards and achievements of Skandavarodaya College during his period. In his address, he mentioned 'It is indeed a great pleasure for me to visit my alma-mater after almost half a century. It is especially gratifying that I am able to meet the staff and to briefly

address the students. I have so many fond memories of adolescent years at Skanda. The incredible dedication of my teachers and their passion to their chosen profession is vividly remain in my memory and late Mr.Orator Sivasubramaniyam, our principal and late Mr.V.Sivasubramaniyam were held in high esteem throughout the nation and their contributions in bringing recognition, respect and honour to Skanda is well known we, not only maintained high academic standards, but also to hold our own in inter- collegial sport, be it a track and field, cricket or soccer.

When I think of my service at Skanda, my heart is filled with joy and satisfaction. Having attached to Skanda as a principal for 12 years, I rendered my utmost service for the betterment of Skanda. During the period of trouble and turmoil in Sri Lanka, I found it very difficult to run the school smoothly. Dr. Aru. Thirumurugan on his visit to Canada to deliver religious discourses explained the immediate needs of Skanda to the Canada OSA and they agreed to sponsor the annual prize day expenses. They have been continuing the venture since then. The financial support and the encouragement that I received from Canada OSA during my tenure of office were colossal. I am ever grateful to them.

The Colombo OSA have been extending their helping hands to show their loyalty to their alma-mater by giving assistance to Skanda's needs and requirements in various ways. Whenever Skanda's students go to Colombo to participate in the national level competitions, they make all the arrangements regarding the food and lodging. The enormous contributions of the old students of Skanda in and out of the country are worthy to be mentioned. The construction of Murugan temple within the premises of Skanda by the Colombo OSA is praiseworthy. They erected a statue for the founder as a token of gratitude. The London OSA recently donated a luxury bus to Skanda for the convenience of the students to participate in various competitions held in different places in Sri Lanka. All the undertakings revealed the love and affection the old students of Skanda have for their alma-mater. What they could do to Skanda is always uppermost in their mind.

Under the stewardship of the present principal Mr. M. Selvastan, the college is shining in all its curricular and extra-curricular activities. On the results of the G.C.E A/L examination in 2016 and 2017 a boy and a girl entered the Moratuwa University-Engineering Stream and Medical faculty respectively. Several others entered various universities for different courses. A meritorious achievement of Skandavarodaya College in 2017 was that a student named K.Yathushan was ranked island wide first regarding the university admission in the technology stream. This is a milestone in the history of Skandavarodaya College. The best result in G.C.E O/L and G.C.E A/L in 2016 & 2017 show ample proof of the principal Mr.M.Selvestan's capacity as an efficient principal.

I would like to express my best wishes to Skandavarodaya College for it goes from strength to strength to achieve even greater milestones in future.

**K.Sivaji**
Emeritus principal
Skandavarodaya College

# யா/ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலை வளர்ச்சிக்கு கொழும்பு ஸ்கந்தா பழைய மாணவர் சங்கத்தின் பங்களிப்புக்கள்

இசுறுத் திட்டத்தின் கீழ் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஆரம்பப்பிரிவு பிரிக்கப்பட்டு 15.06.2010 இல் யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட பொழுது அது வளப்பற்றாக்குறைகளுடன் மிகுந்த சிரமத்தின் மத்தியில் செயற்படத் தொடங்கியது. யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி கொழும்புப் பழைய மாணவர் சங்கத்தினர் ஆரம்பப் பாடசாலை முழுவதற்குமான மின் இணைப்பை செய்து தந்தார்கள். மேலும் இந்த சங்கத்தின் தற்போதைய தலைவர் திரு.இ.ராஜவிஜயன் அவர்களது ஏற்பாட்டில் நீர்ப்பாசன சபை பிராந்திய முகாமையாளர் திரு.குமரகுருபரன் அவர்களால் பாடசாலைக்கு குழாய்க்கிணறு அமைத்து தரப்பட்டதுடன் நீர்வசதிகளும் செய்து தரப்பட்டது. வருடாவருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெறும் மாணவர்களுக்கு தலா 1000 ரூபா வீதமும் 100 புள்ளிக்கு மேல் பெறும் மாணவர்களுக்கு தலா 500 ரூபா வீதமும் தங்கள் சங்கம் பரிசளித்து வருவதையும் மேலும் ஒவ்வொரு பாடத்திலும் திறமை காட்டுகின்ற 15 மாணவர்களுக்கு தலா 1000 ரூபா வீதமும் ஊக்குவிப்பு பரிசு வழங்கி வருவதையும் இந்த சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவு கூறுகின்றேன். மேலும் ஆங்கில ஆசிரியர் இல்லாத காலப்பகுதியில் ஆங்கில ஆசிரியர்களுக்கான விசேட கொடுப்பனவையும், பின் தங்கிய மாணவர்களுக்கான விசேட கல்வி வழங்கிய ஆசிரியர்களுக்கான கொடுப்பனவையும் தங்கள் சங்கம் வழங்கி பாடசாலையின் கல்வி செயற்பாட்டினை வளப்படுத்தியது. அத்துடன் எமது பாடசாலைக்கு 12 பரப்பு காணி கொள்வனவு செய்த போது அதில் 1 பரப்பு காணிக்குரிய பணத்தை தந்ததுடன் அதை கொள்வனவு செய்வதற்கு பெருமளவில் ஏற்பாடுகளை செய்திருந்த தங்கள் சங்கத்திற்கு நன்றிகள்.

தங்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு.சு.பத்மநாதன் அவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்தியடைந்த 12 மாணவர்களுக்கு தலா 1000 ரூபா வீதம் தனிப்பட்ட பரிசளித்ததற்கும் நன்றிகள். மேலும் தங்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு.S.மகேந்திரன் பாடசாலைக்கு மின்விசிறி ஒன்றை தந்தார். அவருக்கும் நன்றிகள். அத்துடன் தங்கள் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர் திருமதி. யோ.செல்வராணி அவர்கள் ரூபா 10000 பெறுமதியான புதிய நூல்களையும் மற்றும் ஏனைய நூல்களையும் வழங்கி பாடசாலையின் நூலகம் ஆரம்பித்து வைத்ததற்கும் நன்றி கூறுகின்றேன். எமது பாடசாலையின் நாடக அணியினருக்கான செலவு ரூபா 30000 ஐ வழங்கிய அமரர்.ம.கருணையானந்தன் அவர்கட்கும் நன்றிகள். தங்கள் சங்க முன்னாள் உபதலைவர் திரு.செ.விபுலானந்தா அவர்கள் தரம் 5 மாணவர்கள் எல்லோருக்கும் ஆங்கில அகராதி வழங்கியதற்கும் அவரது வழிகாட்டலின் கீழ் பாடசாலைக்கு ரூபா 1000000 நிதி வழங்கிய டாக்டர் த.காசிநாதர் (சிங்கப்பூர்) அவர்கட்கும் நன்றிகள். மேலும் தங்கள் சங்கத்தின் வழிப்படுத்துதலின் கீழ் பாடசாலை பரிசளிப்பு விழாவிற்கு வருடாந்தம் ரூபா 30000 வழங்கி வந்த திரு.க.பாலசுப்ரமணியம்

(அமெரிக்கா) அவர்கட்கும் நன்றிகள். அவராலேயே பாடசாலை முன்புற gate ரூபா 85000 செலவில் அமைத்துத் தரப்பட்டது.

மேலும் எமது பாடசாலை மாணவர்கள் மாகாண மட்ட சிறுவர் அரங்கு போட்டியில் முதலாம் இடத்தை பெற்ற போது அவர்ளுக்கு விசேடமாக Tshirt களையும் வழங்கி வெற்றிப்பதக்கங்களையும் வழங்கி கௌரவித்தது. கொழும்பு தமிழ்ச்சங்கம் நடாத்திய சிறுவர்களிற்கான இலக்கியப் போட்டியில் கலந்து கொள்ள ஏற்பாடுகளை செய்தது மட்டுமன்றி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் உணவு சிற்றுண்டி வசதிகளையும் போக்குவரத்து வசதிகளையும் பெரும் பணச்செலவு செய்தது மட்டுமன்றி பரிசளித்து உயர் கௌரவமளித்ததற்கும் நன்றிகள். மேலும் எமது பாடசாலை பரிசளிப்பு விழாவிலும், இல்ல விளையாட்டுப் போட்டிகளிலும் நீண்ட தூரப் பயணங்களின் மத்தியில் பிரதம விருந்தினர்களையும் சிறப்பு விருந்தினர்களையும், நினைவுப்பேருரை ஆற்றுபவர்களையும் அனுப்பி வைத்தமைக்கும் நன்றிகள்.

யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலையின் ஆளுமை மிக்க தோற்றத்திற்கு அத்திவாரமிட்ட தங்கள் சங்கம் மேலும் வளர்ந்து யா/ஸ்கந்தவரோதயா கல்லூரிக்கும் யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலைக்கும் பல்வேறு வழிகளில் உதவ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.வ.நந்தீஸ்வரன்**
முன்னாள் அதிபர்,
யா/ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலை

“கடப்பதற்கு தடைகளும்
வெல்வதற்கு போர்களும்
இன்பத்திற்கு கவலைகளும்
இல்லையெனில் - வாழ்வு
உப்புச்சப்பு அற்றதாகி விடும்”

*- ஜவஹர்லால் நேரு -*

# AS I REMEMBER SKANDA

As I am a proud Skandavarodyan it is indeed a pleasure and privilege to send my greetings and best wishes to the Old Student Association (OSA) Colombo branch as it commemorates its twenty fifth anniversary. I am a true product of Skanda and I feel it would be appropriate and fitting to give a brief history of my Alma mater.

Skandavarodaya College was founded by late Mr Kandiah Upathiyayar in the year 1984 at a very young age of 23 years at Kanderodai. Kanderodai is a small village but It is the seat of Ardent civilisation for over 2000 years and hence historically and archeologically recognised as a significant place in Sri Lanka. Founder's aim was essentially to impart sound education in an atmosphere of our age old Hindu culture and tradition.

To start with it was a small thatched school called "Kanderodai English School"in the midst of uncleared Palmyrahgrove. Founder taught English and the school was registered as a government aid school in 1902. "SeeniUpathiyayar" was appointed as manager. Mr.Chellappa from Tholpuram was a teacher and he was a tower of strength to the Manager. Founder, Manager and Mr.Chellappa strained hard with meagre provisions and steered the school through the critical starting years. From humble beginnings it has steadily grown and now it stands on par with other leading schools in the peninsula.

Commencing my education at Skanda was a great moment in my educational path. I stepped into Skanda soil at the age of 8 and joined fourth standard class. At that time renowned personality and popularly called as "Orator Subramaniyam" was the principal and my respected guru Mr.Subramaniyam also called as "Vicer" was the vice-principal. I am very proud to say that the above two were the principal and the vice principal throughout my student carrier at Skanda. For new admissions there was a small interview by the Principal and only those who are eligible to continue in the English medium were admitted. The medium of education was English. Only Tamil and Religion were the two subjects taught in Tamil. The total number of girls in the school did not exceed the number 20. Ms.Subramaniyam was the only lady teacher. Girls were not allowed to go to their respective classes before the second bell. There was a separate room for the girls and the teacher to wait.

Regarding the staff at that time there were about 15 staff members. Staff room was an isolated thatched shed and it was almost a little behind present day first gate. Main hall was the only solid building. There were the laboratories (now demolished) and the thatched lower hall behind the main hall. Adjoining the laboratory there was the hostel. Later it was the Biology lab we used.

In each class there were only two divisions. Almost all schools were held in double sessions. The teachers who taught us were undoubtedly "Special creations". Their life wasfullofsacrificetothestudentcommunityandtheyweresodedicatedandcommitted that they imparted not only educational values but also all other aspects to produce valuable future citizens. I can remember most of them; Mr Murugesu was a Jovial English teacher;Mr.Sangarapillai was an arithmetic teacher; Mr.Ponnapmpalam,Mr.

Chellaiah, Mr.Sethukavalar, Mr.Ambalawanar, Mr.Peethamparam, Mr.Thambimuthu and Mr.Selvaratnam were some of the teachers.

Main hall comprised classes from JSC to SSC (as it was called at that time). In the SSC class there were only two divisions. "A" division was science and "B" division was Arts. We did not carry bulky books or exercise books and we relied entirely on teachers for our education.

The school received wide publicity and students not only from the peninsula and but from other parts of the Island joined Skanda. Among the pioneer students who distinguished themselves are Mr.M.M.Kulasekaram who later assumed as principal at Royal College, Colombo and Mr.V.K.Nathan who was an education officer of the Northern Province. Special mention must also be made of Mr. Arulnanthy who was a resident of Kanderodai (uncle of Mr.Jeyalingam who was a past pupil of Skanda as well as a Maths teacher for A/L classes for a long time) was the Director of Education for the entire Sri Lanka which is a very great and rare achievement that brought fame and publicity to the College. That was the time there was only one Director for the entire Island. Mr.T.Kandasamy also called as "Burma Kandasamy"was the first to enter the University from the Science stream and later he served as a government Analyst for a long time.

When I was in the second form (Grade 7),Mr.Sivakumaran assumed duty as a maths teacher after completing his training college course. His arrival to Skanda created a new phase in the history of the college. Discipline was maintained not only in the class but throughout the college. He was always seen with a cane in his hand. He also a played a major role in the administration of the College and along with the other two pillars namely Orator and Vicer worked untiringly day and night to raise Skanda higher up. Another person who needs commendation is the only clerk Mr.Kandiah who was in a small room by the side of the Principal's office. He was a silent unassuming personality with long hair and beard. Apart from the clerical work he volunteered to do all extra work connected to College. His attire is very simple with a white "Verty" and a "shawl" but no shirt. Day and night he was in that room and even for weekends or holidays he won't spend time at home. Very seldom he pays a flying visit home. He too stood old trials and tribulations along with the other pillars during the developmental history of the College.

The increasing number of students demanded extra buildings and new blocks were built. The College was raised to Grade 1 along with the other leading schools in North. The new playground was formally opened by the then Manager Dr.P.Subramaniyam (also called as Dr.P.S). The first sports meet was held under the patronage of Dr.P.S. I am fortunate to have seen both the founder and the manager alive. Usually on the day of the sports meet founder Kandiah Upathiyaiyar was taken around the ground in a wheel chair to see all the houses. Manager Dr.P.S never fails to call at the principal's office once a week and that was normally Friday between 11 – 12 noon. Their conversation was always pleasant. His Financial assistance at that crucial period is remarkable.

H.S.C (now A/L) were confined to the laboratories. There was only one girl student in the H.S.C arts class. The science class comprised about 15 boys only. During the early days Malayan boys dominated the college. Science subjects were taught

mostly by the Indian teachers as there was a scarcity of Sri Lankan science graduates. Mr.Srinivasan, Mr.Menondid chemistry of the H.S.C class, Mr.Daniel(Botany),Mr. Mathews(Zoology), Mr.Saundarajan (general science ), Mr.Rajappan.

(Botany) ,Mr.Prabaharan(Zoology), Mr.Krishnamoorthy (Physics), Mr.vishvanathan (Zoology), during successive periods and finally their regime ended with a lady Ms.Pankajam. It should be remembered that their services to Skanda is incredible. I had the good opportunity to study General Science, Botany and Zoology from them. And it is they who initiated me the anxiety to study science. I always remember them with gratitude. Mr.Selvaratnam served at Skanda for a long period successfully and his service to Skanda is valuable. He was a genius in English grammar and literature and was also the prefect of games and the teacher in charge of the soccer team. Mr.Nithiananthan introduced cricket to Skanda and he was in charge of the game for some time.

VidwanArumugam joined the staff in 1949 and his valuable services to the college continued for more than 25 years. He was instrumental in admitting students from Pungudutivu at Skanda and there by the number of students at the hostel increased tremendously. I can still reminisce his sweet voice when he recites "thirumurugattupadai"at the assembly on Fridays in the main hall. His name also will be associated with the college forever. Arrival of Mr Thurairajah from St.Johnes College marks another milestone in the history of Skanda. The popularity of the college reached far and wide and there was a sudden influx of students from all parts of peninsula. From Jaffna Hindu about 7 of them including Mr.Ponnampalam who was later Jaffna Hindu Principal joined Skanda. In the meantime Arts stream was slowly building up the number of girls students and lady teachers increased appreciably. Among the lady teachers Mrs.Krishnasamy is well known to almost all old students. She was bold and courageous to tackle problems at College and was a source of help to the administration of the College. She was entrusted with responsible extra activities of the college which she did very efficiently and successfully. She was associated with the College for a very long period. Increase in number of girl students necessitated a new section for girls and girls students from sixth grade to O/L were accommodated in a new hall which was called as "Kolicoodu"on the western side of the playground which is still in existence. Mrs.Varatharajah was in charge of the girls section till her retirement. That section functioned almost independently. They had a separate assembly, Navarathri,etc.

The first prize giving was held in 1952 and for the first time the College Anthem composed by late Mr.ViduwanArumugam was recited by a group of selected girls and boys together including me.

The period from 1952 – 1969 can be described as the "Golden age" of Skanda. In 1954, Skanda became a super grade school. There were reputed staff for both arts and science streams. It must be mentioned that Orator was able to recruit an academically accomplished staff with requisite potentialities to impart a sound education. The arts stream was equally strong with Mr.C.Thiyagarajah (later principal of Skanda), Mr.Santhirasekaram who was later appointed as a professor at the University of Peradeniya, Mr.V.Ponnampalam known as "communist Ponnampalam" and Mr.Rajasingam in the staff.Student's population went on increasing and even Sinhalese boys joined from the South. Houses at Kanderodai and Chunnakam

were full with boarders. Even girls from Karainagar and other remote places were boarded at nearby houses. The examination results were excellent and many entered various faculties of the University. Not only academically the performance in sports too was marvellous becoming champions in the first eleventh soccer twice at the Inter school competition at the JSSA grounds. In 1963, the results at the University entrance examination was exemplary good. 42 students entered the University for various Faculties which was the highest in the peninsula and third highest in the Island. During this time student population exceeded 2,000. After the retirement of Vicer Subramaniyam and Mr.Sivakumaran the golden Era slowly declined and it is a heartening to comment that whatever is said and done the period of 70s marked the end of the "Golden age" of Skanda.

In 1975 January, I joined the staff of my good old College and continued till my retirement till 1996. I am a living witness who has experienced both the phenomenal rise and the declining stages of Skanda. At the moment there are good signs of Skanda rising again as revealed by the examination results and the increasing student population. Extra-curricular activities like sports and drama competition are also coming out with flying colours. If this trend continues beyond doubt the college will achieve the past glory very soon.

OSA Colombo branch from its inception is executing most of the urgent needs of the College.Construction of the Murugan temple, erection of statues of the Founder and the Manager in the school premises and the release of long awaited stamp are some of the historic events worth mentioning. Determination and the commitments of the members steered the College through the turbulent times. Students are also encouraged by awarding scholarship to the needy and the bright students and also honouring the students who excelled in exams.

Finally I will be failing in my duty if I don't thank the President and the committee members for offering me an opportunity to send a greeting message for the commemoration of its 25th Anniversary and the release of a Magazine. Today we see the fulfilment of their dream with a sense of pride and satisfaction. I wish them success in all their endeavours to make the College stands majestically and unparalleled amongst all other prestigious institutions.

Thank you

**Mrs. T. Yogeswaran**

Skandavarodayan and retired teacher of Skanda

## SKANDAVARODAYA COLLEGE, OSA, COLOMBO.
### EXECUTIVE COMMITTEE 2006 /2007



**Seated (Left to Right)**

Mrs. S. Yogarajah *(Asst. Secretary)*, Mr. N. Karunaiananthan *(Vice President)*, Mr. K. Eraivan *(Secretary)*, Dr. M. Kathirkamanathan *(President)*, Mr. P. Suntharalingam *(Treasurer)*, Dr. S. Sivanantharajah *(Vice President)*, Mr. S.P. Sivagnanam

**Standing**

Mr. M. Dayalan, Dr. V.S. Shanmuganathan. Mr. V.T. Manoharan *(Editor)*, Mr. S. Sivarajah, Mr. S. Mahendran, Mr. S. Pathmanathan *(Vice President)*, Mr. B. Sri Ratnam, Mr. E. Kanendran *(Vice President)*

**Absent**

Mr. C. Thangarajah *(Vice President)*, Mr. A. R. Balasridharan, Mrs. T. Mariyaseelan

## Skandavarodaya College Old Students Association -Colombo
### Executive Committee (2007-2008)



*Seated:*

*Mrs S.Yogarajah( Asst. Seretary). Mr S. Pathmanathan(Vice President),Mr K. Eraivan(Secretary), Mr N. karunainanthan(President),Mr P. Suntharalingam(Treasurer),Dr S. Sivanantharajah(Vice President), Mr E. Kanendran*

*Standing*

*Mr M. Dhayalan,Dr K. Balachandran(Vice President), Dr V. S. Shanmuganathan Mr R. Rajavijayan, Mr V.Vazavan Mr S. P. Sivagnanam(Vice President), Mr A. R. Balasiritharan(Vice President).*

## SKANDAVARODAYA COLLEGE OLD STUDENTS ASSOCIATION -COLOMBO
எமது கல்லூரி வருங்காலங்களில் பல சாதனைகளை படைத்து வளர்ச்சிப்பாதையில் மென்மேலும் வீறுநடைபோட இச்சங்கம் உறுதுணையாக இருக்கவேண்டுமென ஸ்கந்தப் பெருமானை வேண்டி வெள்ளி விழாக்காணும் பழைய மாணவர் சங்கத்திற்கும் உறுப்பினர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கின்றேன்.

பழைய மாணவர் பணி உயர
பாடசாலையின் நிலை உயரும்
பிடித்தமான வகையில் எங்கள் - கல்லூரி
பீறிடும் எழுச்சி கொண்டே......
" தொடர்க உங்கள் பணி வளர்க ஸ்கந்தா அன்னை"
நன்றி

**அ.செல்வேன்றடாஸ்**
செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கந்தரோடை, சுன்னாகம்.

# SKANDAVARODAYA COLLEGE
# OLD STUDENTS ASSOCIATION – CANADA

## ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

104 Olivewood Drive
Markham, Ontario L3S 3E1

---



Congratulations to SkandavarodayaCollege Old Students Association of Colombo on celebrating their 25th anniversary. Thank you to all those who helped run this association in Sri Lanka's capital for a quarter of a century. We are grateful for all the support and contributions you have made for our school.

After years of not functioning, I am proud to say I was there 25 years ago serving as an auditor to this association in their first meeting. It was my pleasure to have had a small part during the start of this committee.

I wish you all the best in your future endeavors in continuing helping our school for many more years to come. I pray to Skanda god for you to continue your success.

Thank you,
**N. Chandrarajah** BSc. (Eng)
President, Old Student Association Canada
Skandavarodaya student (1959-1969)

# ஸ்கந்தா ஆரம்ப பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரின்

# வாழ்த்துச் செய்தி



வட மாகாணத்தில் சிறந்து விளங்கும் யாழ்ப்பாண குடாநாட்டில் கந்தரோடைப் பகுதியிலே வெண்டாமரை மீது அமர்ந்து அருளாட்சி செய்யும் கலைமகள் துணை கொண்டு அமைந்திருக்கும் பள்ளியே யா. ஸ்கந்தவரோதயா ஆரம்ப பாடசாலை. இப் பாடசாலையின் செயற்பாடுகளுக்கு ஊக்கமளித்து பற்பல உதவியளிக்கும் கொழும்பு பழைய மாணவர் சங்கம் இவ்வாண்டில் தம் சேவையில் வெள்ளி விழாக் காண்கின்றது என்று எண்ணும் போது அதன் சேவை நிலைத்திருந்து உச்ச நிலையை அடைந்திருப்பது தெரிகின்றது.

வருடா வருடம் எமது பாடசாலையில் புலமைபரிசில் பரீட்சைக்கென ஒரு தொகுதி பணத்தினை தமது சேமிப்பிலிருந்து வழங்கி எமது சிறார்களின் கல்வி மேலோங்கி நிற்க உதவி வரும் உமது சேவை பாராட்டுதற்குரியது.

மேலும் எமது பாடசாலையில் கற்கும் மாணவர்களில் கல்விச் செயற்பாட்டில் பின் தங்கிய நிலையில் உள்ள மாணவர்களின் மேம்பாட்டிற்கான நிதியினை வழங்கி எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவிய உமது சேவை அளப்பரியது.

இவ்வாறாக "தொண்டர் தம் பணி சொல்லவும் உளதோ..." என்ற வாக்கிற்கமைய உம் பணி எம் மண்ணில் என்றும் நிலை பெற பல நூற்றாண்டுகள் உம் பணிதொடர வாழ்த்துகிறேன்.

**குலசேகரம் ரமேஸ்**
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திக் குழு
யா. ஸ்கந்தவரோதய ஆரம்ப பாடசாலை.

*With Best Compliments from*

# JEYECHANDRANS

*The Art of Fashions*

No. 433, Galle Road, Wellawatte,
Colombo - 06
Tel : +94 11 4528438
Fax : +94 11 2362822
Email : info@jeyechandrans.com
Skype : jeyechandrans888
Web : www.jeyechandrans.com

*With Best Compliments from*

# SKYLARR (PVT) LTD

PROPERTY DEVELOPERS
& CONTRACTORS FOR BUILDINGS

REG NO: PV 66 820

No: 09, Beltona Lane
Colombo - 04
Tel: 0113 158 230, Mob: 0777 356 235
www.skylarr.com

2015 ஆம் ஆண்டு தமிழ்த்தினப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்ற யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் மாணவர்களுக்கான கௌரவிப்பு பழைய மாணவர் சங்கத்தினரால் கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்ற போது



**2016 ஆம் ஆண்டு தமிழ்த்தினப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்ற யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் மாணவர்களுக்கான கௌரவிப்பு பழைய மாணவர் சங்கத்தினரால் கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்ற போது**



**2017 ஆம் ஆண்டு தமிழ்த்தினப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்ற யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் மாணவர்களுக்கான கௌரவிப்பு பழைய மாணவர் சங்கத்தினரால் கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்ற போது**














## யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவர்களினால்
## 'ஸ்கந்தா நிதியம்' ஆரம்ப நிகழ்வின் காட்சிகள்


















*With Best Compliments from*

# LAISH INDUSTRIES (PVT) LTD

**414/10 K. Cyril C Perera Mawatha**
**Colombo 13**

*With Best Compliments from*

# NEW CITY PHARMACY

**No. 267/C, Kirula Road,**
**Narahenpita, Colombo 05.**

## Dial for Health & Free Home Delivery
## Tel: 0112 368080

Our Branch:
**NEW CITY PHARMACY**
No. 03, Udaya Raja Mawatha,
Badulla
Tel: 071 126 9983



*With Best Compliments from*


# Ganesha Stores

***Wholesale and Retail Tea Merchants***

**No. 238, Bankshall Street, Colombo - 11**
**Mob: 077 777 1240**
**Tel: 2329380, 7208718**

*Dealers of Best Tea*





*With Best Compliments from*



# என்னை ஈர்த்த முத்தான மூன்று ஆசிரியர்கள்

ஸ்கந்தாவில் ஆசிரியையாக எழுபத்தேழாம் ஆண்டு இணைந்தபோது என்னைப் பெரிதும் கவர்ந்த ஆசிரியைகள் பலரிருந்தபோதிலும் மூவரைப்பற்றி மட்டுமே எழுத விழைகிறேன். திருமதி திலகாம்பிகை யோகேஸ்வரன், திருமதி டிவீனியா அரியராசா, திருமதி சேதுப்பிள்ளை வரதராசா என்போரே அவர்கள். மூவருமே பிறர் நலனில் அக்கறை கொண்டவர்கள், நல்ல பண்பாளர்கள், நல்ல முன்மாதிரிகளாகத் திகழ்ந்தவர்கள். மூவருமே மாணவர்களை வழிநடத்தும் திறன் மிக்கவர்கள். அடக்கமானவர்கள் எனினும் என்றும் தலை குனியாத பெருமை கொண்டவர்கள்.

திருமதி யோகேஸ்வரன் ஸ்கந்தாவில் கற்றவர். விலங்கியல் ஆசிரியராய் விளங்கியவர். கந்தரோடையைச் சொந்த ஊராகக் கொண்டவர். மாணவர்களின் பெற்றோர், உறவினர்கள் யார் எவர் என்று அறிந்திருந்தவர். அவர்களின் குடும்பப் பின்னணியையும் தெரிந்து வைத்திருந்தவர். இவ்விடயத்தில் அவருடைய ஞாபக சக்தியும் அபாரமானது. இதனால் பிள்ளைகளைப் புரிந்துகொண்டு அவர்களுக்குப் பக்கபலமாக நின்றார். சொந்த வாழ்க்கையில் சிக்கனத்தைக் கடைப்பிடித்தபோதிலும் பிறருக்கு உதவுவதில் எப்போதும் முன்னின்றவர். "இந்தப் பள்ளிக்கூடத்தில் உழைக்கிறோம் இந்தப் பள்ளிக்கூத்துக்காகச் செலவழிக்கவும் வேண்டும்" என்பது அவரது கொள்கையாகவே இருந்தது. ஸ்கந்தா அவரது இரண்டாவது வீடாக இருந்தது.

கலைப்பட்டதாரியான திருமதி வரதராசா அவர்கள் பாடசாலையின் மாணவிகள் பிரிவு தனியாக இயங்க ஆரம்பித்தபோது அதனைத் திறம்பட நிர்வகித்தார். மாணவிகளின் படிப்பில் மட்டுமல்லாது வளர்ப்பிலும் பெரும் அக்கறை காட்டியவர். தாமே சிறந்த ஆளுமை கொண்டிருந்தமையால் மாணவருக்கு மட்டுல்லாமல் என்னைப்போன்ற ஆசிரியைகளுக்கும் சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர்.

திருமதி அரியராசா சிறந்த விலங்கியல் ஆசிரியர். எதைச்செய்தாலும் திருத்தமாய்ச் செய்யவேண்டும் என்ற எண்ணமுடையவர். மாணவர்களையும் அவ்வாறே வழிநடத்தியவர். அவருடைய சொல் செயல் எல்லாற்றிலும் ஒரு நேர்த்தி இருக்கும். தீர்க்கமாக முடிவெடுப்பதிலும் அதனைச் செயற்படுத்துவதிலும் திறமை கொண்டவர்.

வெறும் பட்டதாரியாகக் கடமையில் இணைந்த எனக்கு ஸ்கந்தா ஒரு பயிற்சிக் கல்லூரியாகவே திகழ்ந்தது. அன்றிருந்த ஆசிரியர்கள் பிரச்சினைகளை விவாதிப்பதையும் சிக்கல்களைத் தீர்ப்பதையும் முடிவெடுப்பதையும் வாழ்வைப் பலகோணங்களில் அலசி ஆராய்வதையும் அன்பாக அக்கறையாக மற்றவர்களை நடத்துவதையும் பார்த்து வளரும் பேறு எனக்குக் கிடைத்தது.

நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் நிலத்தில்யார்க்கும் அஞ்சாத நெறிகளும் திமிர்ந்த ஞானச் செருக்கும் கொண்ட செம்மை மாதர் இவர்க்கு என் பணிவான மரியாதையையும் அன்பையும் நன்றியையும் தெரிவிக்கக் கிடைத்த சந்தர்ப்பத்தை எண்ணி மகிழ்கிறேன்.

இவ்வாய்ப்பை நல்கிய கொழும்பு ஸ்கந்தா பழைய மாணவர் சங்கத்திற்கும் என் நன்றிகள். இவர்களின் செயற்பாடுகள் மென்மேலும் ஸ்கந்தாவைப் பெருமைப்படுத்த உதவும்படி இறைவனைப் பிரார்த்திக்கிறேன். இன்றும் என்றும் இவர்களின் பணிகளுக்காக வாழ்த்துக்கள்.

**திருமதி வி. இலட்சுமணன்**
முன்னாள் பிரதி அதிபர்.
ஸ்கந்தவரோதயக் கல்லூரி

# A MESSAGE FROM THE FORMER DEPUTY PRINCIPAL

I am indeed glad to know that O.S.A of Skanda Colombo is celebrating its 25th anniversary this year and releasing a magazine to commemorate it.

I consider it a proud privilege to pen a few words of greetings as I was the Deputy Principal of Skanda for some time.

Skanda has grown from strength to strength in popularity and in terms of number of students, success in producing good results and also in other extra activities of the college. Undoubtedly all of these would not have been possible without the hard work of successive Principals, staff, students, parents and lastly but not least the O.S.A.

The O.S.A satisfied many of the immediate needs of the college and gave a helping hand in college functions.

The cooperation of O.S.A committee is really appreciable.My sincere gratitude goes to the President and committee members of the O.S.A Colombo branch to have given me an opportunity to send my blessings and greetings on this occasion.

May lord Skandan shower all his choicest blessings on all the attempts to make this event a great success.

**Miss.T.Sangarappillai**
Sp.Trd.(Sc.), BSc.(Hons)
P.G.D.E, S.L.T.S-I.

"ஒரு பொருளை நாம் விரும்பத் தொடங்கும் போதே அதை ஒருநாள் வெறுக்கவும் வேண்டிவரும் என்ற உண்மையை நாம் உணர்வதில்லை; ஆனால் விரும்பும் போதே வெறுக்கவும் தெரிந்து கொண்டவர்கள் வீணான மனவருத்தங்களுக்கு ஆளாவதில்லை!"

*- கௌதம புத்தர் -*

# 'ஸ்கந்தா' கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினரின் சீரிய பணிகள் தொடர்பான நினைவலைகள்



இவ்வருடம் ஸ்கந்தா பழைய மாணவர் சங்கத்தின் கொழும்பு கிளையினர் வெள்ளி விழாவை கொண்டாடுவதுடன் சிறப்பு மலரொன்றினையும் வெளியீடு செய்கின்றனர். இந் நிகழ்வுகள் இனிதே நிறைவுற எல்லாம் வல்ல ஸ்கந்த பெருமானின் அருள் வேண்டி வணங்குகிறேன்.

எமது பாடசாலை 2005 ஆம் ஆண்டு ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஆரம்ப பிரிவாகவும் பின்னர் 2010 ஆம் ஆண்டிலிருந்து 'இசுறு' திட்டம் நடைமுறைப்படுத்தியதன் காரணமாக நிருவாக ரீதியாகப் பிரிக்கப்பட்டு ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலை என்ற பெயருடன் கல்லூரியின் ஊட்டற் பாடசாலையாக மிளிர்கின்றது.

சங்கத்தினர் ஆற்றுகின்ற பணிகள் எண்ணிலடங்காதவை. அந்த வகையில் எம் சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கும் அயராது பாடுபடுகின்றனர். வருடா வருடம் நடைபெறுகின்ற அரசின் நன்கொடை பெறுவதற்கான புலமைப்பரிசில் வெட்டுப் புள்ளிக்கு மேலே பெற்றுச் சாதனை படைக்கும் வெற்றியாளர்களுக்கும், நூறு புள்ளிகளுக்கு மேல் பெறுகின்ற மாணவர்களுக்கும் பணப் பரிசில் வழங்கி அவர்கள் கல்வி மேன் மேலும் சிறப்புற ஊக்கமளிப்பது வரவேற்கத் தக்கது.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்பது ஒளவையார் வாக்கு. அதற்கிணங்க தமிழ்மொழி, கணிதம் ஆகியவற்றுடன் சர்வதேச தொடர்பாடல் மொழியான ஆங்கிலத்திற்கும் சங்கத்தினர் முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். அவற்றின் கற்றல் விருத்திக்காக தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரையான மாணவர்களில் அப் பாடங்களில் முதனிலையிலுள்ள பதினைந்து மாணவர்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன. ஆங்கில ஆசிரியர் இல்லாத போது கடமையாற்றிய தொண்டர் ஆசிரியருக்கும் வேதனம் அளித்தது குறிப்பிடத்தக்கது.

மேலும் வறிய மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வாங்குவதற்கு நிதியுதவி செய்ததுடன் அவர்களுக்கான விஷேட வகுப்புகளை நடாத்திய தொண்டர் ஆசிரியருக்கும் சம்பளம் வழங்கினர். அத்துடன் வகுப்பறைகளுக்கு மின்னிணைப்பும் செய்தமையால் எம்மால் பல செயற்பாடுகளை இலகுவாக நிறைவேற்ற முடிந்தது.

2015ஆம் ஆண்டு கொழும்பு தமிழ் சங்கத்தின் தேசிய கலை இலக்கிய பெரு விழாவில் 2014ஆம் ஆண்டு மாகாண மட்டத்தில் வெற்றியீட்டிய சிறுவர் அரங்கு நாடகத்தை அரங்கேற்றச் செய்து தாம் பார்த்து மகிழ்ந்ததுடன் அது தொடர்பான முழுச் செலவீனங்களையும் பொறுப்பேற்றனர். மாணவர்களுக்கும், அதிபர், ஆசிரியர்களுக்கும் பரிசில்கள் வழங்கி சிறப்பித்தனர்.

2015ஆம் ஆண்டிலும் மாகாண மட்டத்தில் சிறுவர் அரங்கு நாடகம் முதலிடம் பெற்றது என்பதை அறிந்தவுடன் மாணவர்களுக்கு 'ஸ்கந்தா ஆரம்ப பாடசாலை" எனப் பெயர் பொறித்த "ரீ" சேர்ட்டை (T.shirt) அன்பளிப்பாக வழங்கியிருந்தனர். நாடகப் போட்டிக்கான செலவுகளைப் பொறுப்பேற்றார். திரு. ந. கருணை ஆனந்தன் அவர்கள்.

இங்கு நடைபெறுகின்ற பரிசளிப்பு விழாவிலே தமது உறவுகளின் நினைவாக நினைவுப் பரிசில்கள் வழங்கியும் விழாக்களில் விருந்தினராகக் கலந்து கொண்டும் சிறப்பித்தனர்.

"வாசிப்பை நேசிப்போம்" என்ற தொனிப் பொருளுக்கமைவாக எமது நூலகத்திற்குப் பொருத்தமான நூல்களை திருமதி. S. யோகராஜா அன்பளிப்பாக வழங்கி மாணவர்களிடத்தே வாசிப்பு ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளார்.

*"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்*
*ஞாலத்தின் மாணப் பெரிது."*

என்னும் பொய்யாமொழிப் புலவரின் வாக்கே என் நினைவில் தோன்றுகிறது.

"அவர்கள் பணி என்றென்றும் தொடர்ந்து புதிய புதிய கிளைகளை பரப்பி வளர்வதாக."

**செல்வி. வை. சாவித்திரி**
ஓய்வு நிலை உப அதிபர்
யா/ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலை.

**நல்வாழ்த்துக்கள்**

ரஞ்சினி தேவேந்திரா

# கவலைகள் அற்ற கல்லூரி வாழ்க்கை

பெற்ற அன்னையையும்
பிறந்த நன்நாட்டையும்
உற்ற நண்பர்களையும்
கற்ற கல்லூரியையும்

மறந்தவன் மனிதன் அல்லன். மனித வாழ்க்கையில் மறக்க முடியாத மட்டற்ற மகிழ்ச்சி நிறைந்த, கவலைகள் களைந்த பொற்காலம் கல்லூரி வாழ்க்கை. பிறந்த ஒரு மனிதன் தனது 4-5 வயதுகளில் பாடசாலை படிகளில் காலடி எடுத்து வைத்து கல்வியை ஆரம்பிக்கின்றான். தொடர்ந்து ஒரு சில ஆண்டுகளில் தனது எதிர் கால தலைவிதியை நிர்ணயிக்க, நாட்டின் நற்பிரஜையாக்க பல வழிகளில் உறுதுணை புரிகின்ற பிரபல்யம் மிக்க உயர் பாடசாலைகளை நோக்கி ஓடுகின்றான். அந்த வரிசையில் சுன்னாகம் கந்தரோடையில் புகழ்பூத்த தலைசிறந்த பாடசாலையாகத் திகழ்ந்த "ஸ்கந்தவரோதயாக் கல்லூரி" அன்னைக்கு மகனாகச் சென்று பாடங்கள் கற்றேன். பாரதியின் பாடல்வரிகளுக்கு ஒப்ப, காலையில் எழுந்து படிப்பு, பின்பு கல்லூரிக்கு ஓட்டம், பின்னர் கனிவு கசியும் ஆசான்களின் மூலம் பாட்டும் படிப்பும், மாலை முழுவதும் விளையாட்டு, என்பதை வழக்கப்படுத்தினோம். ஆனால் இன்று காலம் தலைகீழாக மாறி உள்ளது. இருப்பினும் எமது கால வாழ்க்கையில் கல்லூரி வாசலை அண்மியதும் கருமைநிறமான கடுமையான தொனியுடனும் கையில் பிரம்புடனும் ஒருவர் நிற்பார். அவர் தான் எமது அன்புக்கு இசைவான ஆசான் பிரதி அதிபர் அமரர் சிவகுமார் அவர்கள். அவரைக் கண்டதும் கலக்கும் இருப்பினும் எம்மை சுதாகரித்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாக வகுப்பறைகளுக்கு செல்வோம். சில வேளைகளில் அவர் இன்னும் "ஓடேலே" என்பார். அதற்கேற்ப நாம் ஓடியே போய் விடுவோம். சில நாட்கள் சற்றுப் பிந்தி காலடி வைத்தால், எங்களை மறித்து அந்த வாசலை அண்டியுள்ள குப்பை கூளங்களை அப்புறப்படுத்தி விட்டு வகுப்பறைக்குச் செல் என்பார். அதையும் செய்து விட்டு வகுப்புக்கு செல்வோம். அங்கே பாடங்கள் ஆரம்பிக்கும். பல வகை சிறந்த ஆசிரியர்கள் மூலம் கல்வி பயின்றோம். இருப்பினும் இடையிடையே எமது நண்பர்களுக்கிடையில் கடிபாடு, அடிபாடு, புத்தகங்களை வீசுதல், அப்பியாசத் தாள்களை கிழித்து எமது வகுப்பறையிலிருந்து அடுத்த வகுப்பறைக்கு "ரொக்கட்" ஏவுதல், பலூன்களை ஊதி பறக்க விடுதல், இப்படி பலப் பல குறும்புகள் செய்வோம். அதிலும் ஒரு மகிழ்வு தான். பாடங்கள் அல்லாத (free period) வகுப்பு நேரத்தில் நேரடியாக மைதானத்துக்கு சென்று வேர்க்க விறுக்க விளையாட்டு, பாடசாலை சீருடை வெள்ளையிலிருந்து பழுப்பு நிறமாக மாறும். அதிலும் சந்தோசம் ஆனால் மாலையில் வீட்டில் உடுப்பை ஊத்தையாக்கியதற்கு அம்மாவிடம் இரண்டு அறை வாங்கிக் கொண்டு, இருக்கும் உணவை கொறித்து விட்டு மீண்டும் விளையாட்டுக்கு ஓட்டம், ஆனாலும் இரவில் குறிப்பிட்ட நேரம் படித்தே ஆக வேண்டும் அல்லாவிடில் அப்பாவின் அர்ச்சனைகள் வேறு, மேலும் பாடசாலை விளையாட்டுப் போட்டி, நாடக விழாக்கள் பேச்சுப் போட்டிகள் என்று அத்தனை நிகழ்வுகளிலும் பங்கு கொள்வோம்.

இவ்வாறு பல வழிகளிலும் மட்டற்ற மகிழ்வுடன் கல்வி கற்று சிறந்த நிலையினை அடையவைத்த ஸ்கந்த அன்னையை பொலிவுடன் நாம் கூடி போற்றி செய்ய வேண்டும்.

இன்று கூட அந்த அன்னையின் பழைய புதல்வர்களாக பல்வேறு வெளி நாடுகளில் பழைய மாணவர் சங்கங்களை நிறுவி பல வழிகளிலும் கல்லூரித் தாய்க்கும் தற்போது கல்வி பயிலும் மாணவர்களுக்கும் உதவிகளும் ஒத்துழைப்புகளும் வழங்கிக் கொண்டிருக்கும் சங்கங்களில் ஒன்றாக எமது கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் இவ்வாண்டு அவர்களின் 25வது ஆண்டு விழாவான வெள்ளி விழாவினை கொண்டாடும். இப் பெருமை மிகு சங்கத்தில் நானும் ஒரு அங்கத்தவன் என்ற முறையில் பெருமிதம் அடைவதோடு எமது சங்கத்தினால் வாழ்த்துவதோடு. தொடர்ந்தும் கல்லூரித் தாய்க்கு உதவுவதற்கு எம்மை அர்ப்பணிப்போமாக.

நன்றியுடன்

**மு. சதானந்தன்**

உதவிச் செயலாளர்.

*ஆழமான அறிவுள்ளவனை. மெய்யறிவு படைத்தவனை. இது நல்வழி, இது அல்வழி, என்று அறிந்தவனை. உத்தமமான பொருளை அடைந்தவனை நான் அந்தணன் என்பேன்.*

*- புத்தர் -*


**MASTER SPOT**

PHARMACY & GROCERIES

No. 193A, Galle Road, Dehiwala.
Mobile : 071 492 1678
Tel : 011 273 7123

# கல்லூரியில் எமது சொந்த அனுபவங்கள்

உலக வரைபடத்தை உற்று நோக்கி, புள்ளி வடிவான ஸ்ரீலங்காவை பார்க்க வேண்டுமானால் நுணுக்குக் காட்டி மிக அவசியம். ஸ்ரீலங்காவின் சிரசாக உள்ள யாழ்ப்பாணத்தை பற்றி "கல்கி" கிருஷ்ணமூர்த்தி விபரிக்கையில் தடக்கி விழுந்தால் கோயில் அல்லது பள்ளிக் கூடம் என்று இரத்தினச் சுருக்கமாக ஒரு முறை வெளிப்படுத்தியிருந்தார். யாழ்ப்பாணத்தின் இரண்டு கண்களாக கல்லூரிகளும் கோயில்களும் திகழ்கின்றன. குமாரசுவாமி புலவர் தோன்றிய சுன்னயம்பதியில் வயல் சார்ந்த பின்னணியிலுள்ள கந்தரோடையில், கந்தையா உபாத்தியாரினால் உருவாக்கப்பட்ட ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் பழைய மாணவன் என்று நினைக்க – சொல்ல – எனது இதயம் பூரித்து கண்ணீர் வழிகின்றது.

கொழும்பு சுய வாழ்க்கை பேரவை, கொழும்பு யோக ஆரண்யம், கொழும்பு Dorn meathod of Sri Lanka, நீர்ப்பாசன திணைக்கள தமிழர் பண்பாட்டு கழகம், வேலணை மத்திய கல்லூரி, கொழும்பு பழைய மாணவர் சங்கம், போன்ற பல்வேறு அமைப்புகளில் பல்லாண்டுகளாக பல்வேறு பதவிகள் வகித்து இன்றுவரை பல்வேறு சேவைகளை நான் செய்து வருவதற்கு மிக மிக முக்கியமான காரணம் மறைந்த ஸ்கந்தா அதிபர் (1962 – 1969) V. சிவசுப்பிரமணியம் ஆவார். பல்வேறு தரத்தினருடன் பழகும் பாங்கு, எப்பொழுதும் புன்னகையுடன் இருத்தல், பொறுமை, நாசுக்காக, நளினமாக, இனிமையாக மாணவர்களை திருத்தும் பாங்கு போன்று பண்பில் தான் எனக்கு இரவும் பகலும் வழிகாட்டி என்னை இயங்கச் செய்கின்றது. அவரும் அவருடைய சந்ததியினரும் என்றும் நிறை வாழ்வு வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அக்காலத்தில் எனக்கு மிகவும் பிடித்த படம் நவராத்திரி. அதில் நடிகர் சிவாஜி கணேசன் ஒன்பது வேடங்களில் நடித்துள்ளார். அந்தப் படத்தை இணுவில் ஸ்ரீ காளிங்கன் தியேட்டரில் களவாக பார்த்து பிடிபட்டு பெற்றோரை வித்துவான் ஆறுமுகம் ஆசிரியரைச் சந்திக்க வைத்தது. கல்லூரி வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவமாகும். நானும் நண்பர்களும் நவராத்திரி படம் பார்க்க போக தீர்மானித்து ஸ்கந்தா விடுதியில் உள்ள எமது படுக்கையை எம்மைப் போன்ற பொம்மைகள் தூங்குவதாக சோடித்து களவாக நவராத்திரி படம் பார்த்து விட்டு வந்து உறங்கினோம். அடுத்த நாள் காலை எங்கள் விடுதி கண்காணிப்பாளர் வித்துவான் ஆசிரியர் எங்களை அழைத்து நேற்று உங்கள் படுக்கையில் உங்களை காணவில்லை. இப்படியான களவை என்னால் அனுமதிக்க முடியாது. உங்கள் பெற்றோர் வந்து என்னை சந்தித்து விளக்கமளித்தாலொழிய உங்களை பாடசாலையில் அனுமதிக்க முடியாது என்று கூறி விட்டார். என்ன செய்வது எமது பெற்றோர் வந்து மன்னிப்புக் கோரி இனிமேல் அவர்கள் அப்படி செய்ய மாட்டார்கள் என்று கூறிய பிறகு தான் எங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

ஸ்கந்தாவில் கிளாக்கர் ஐயாவை தெரியாதவர்கள் கந்தரோடை பிரதேசத்தில் இருக்க முடியாது. கடமை தவறாத இயந்திர மனிதன். மேற்சட்டை அணியாத விநோத மனிதன். ஈ.வேரா பெரியாரை போன்ற நீண்ட தாடி ஒரேற்றரின் நம்பிக்கை நட்சத்திரம். கிளாக்கர் ஐயா ஒரு நாள் என்னைக் கூப்பிட்டு "தம்பி என்னுடைய மூக்குக் கண்ணாடியை காணவில்லை ஒருக்கால் கண்டு பிடித்து தா" என்றார். நானும் பரபரப்பாக எங்கும்

தேடினேன். அவரது கண்ணாடித் தோழனைக் காணவில்லை. திடீரென திரும்பும் போது பளிச் சென்று மின்னல் அடித்தது போன்று என் மனதில் பிரகாசம், ஐயா உங்கள் தலையில் மூக்குக் கண்ணாடி இருக்கிறது என்றேன். இருவரும் பலமாக சிரித்து எங்கள் முட்டாள் தனத்தை மறைத்துக் கொண்டோம்.

மிகுந்த கல்விமான் எங்கள் சமய பாட ஆசிரியர் விஸ்வநாதக் குருக்கள் அவருக்கு சாயி பாபா என்றால் அலர்ஜி. அவரது அலர்ஜி லெவலை சீண்டி சோதித்து பார்க்க தீர்மானித்தேன். எனக்கு நேரடியாக சீண்டுவதற்கு மிகுந்த பயம். ஓர் அப்பாவி நண்பரை தேர்ந்தெடுத்து சாயிபாபாவின் வாழ்க்கை வரலாற்றை சமயப் புத்தகத்தில் சேர்த்தால் என்ன என்று கேட்கும் படி தூண்டினேன். அவன் இந்தக் கேள்வியை கேட்க ஆசிரியர் சீறியெழுந்து "போடா வெளியே" என்று அவரை வகுப்பை விட்டு வெளியேற்றி விட்டார். அதன் பின் நான் மிகப் பெரிய தப்பு செய்து விட்டேன் என்று இன்று வரை உணர்கின்றேன்.

என்னுடைய அன்பும், பண்பும், அறிவும் மிகுந்த துரைராசா மாஸ்டர் கனடாவில் மறைந்து விட்டார் என்று கேள்விப்பட்டதும் எனது மனம் அனலிட்ட மெழுகு போல உருகியது. அவருடன் என்னுடைய தொடர்புகள், பாடசாலைக் காலம் கொழும்பில் அவர் வாழ்ந்த காலம், கனடாவிற்கு போவதற்கு முன் அவரைச் சந்தித்த சம்பவங்கள் மீண்டும் மனத்திரையில் ஓடியது. அவருடைய மனக் கண்ணின் ஆற்றலால் - கரும் பலகையில் படம் வரைதல், குரலில் இருந்து ஆளை அடையாளம் காணல், புத்தகத்திலுள்ளதை அப்படியே திருப்பிச் சொல்லும் ஆற்றல்.. இப்படி இன்னோரன்ன. நான் கொழும்பு ஸ்கந்தா பழைய மாணவர் (செயலாளர்) பதவியில் இருந்தபடியால் அவர் நினைவாக ஞாபகார்த்த விழா ஏற்பாடு செய்து அவரைப் பற்றி அவரின் மாணவர்களின் உள்ளக் குமுறலை வெளிப்படுத்த ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கியது எனது வாழ்வில் மறக்க முடியாது.

எல்லோருடைய வாழ்க்கையிலும் 9 கிரகங்கள் ஆட்சி புரிகின்றன. என்னுடைய வாழ்க்கையிலும் ஸ்கந்தாவின் ஆசிரிய மணிகளான துரைராசா, விஸ்வநாதகுருக்கள், திருமதி. மாணிக்கவாசகன், நாகரட்னம், மைலுப்பிள்ளை அகிலேஸ்வரன், வித்துவான் ஆறுமுகம், V.T. கந்தசாமி, V. பொன்னம்பலம் போன்றவர்களின் ஆளுமையின் அதிர்வுகள் வழி நடத்திச் செல்கின்றது.


வாழிய வாழிய எங்கள் கல்லூரி
வளமலிந்தோங்கியே என்றும்
வாழ்க! வாழ்க! வாழ்க!.

பின் இணைப்பு:-

எமது கல்லூரியின் மாணவ மணிகளின் ஆத்மீக வளர்ச்சிக்காலம் 108 வருடமாக ஆலயம் இல்லாத குறையை நீக்குமுகமாக – மாமல்ல புரத்திலிருந்து அருள் முருகனை வரவழைத்து ஸ்கந்தா வளாகத்தில் 2002இல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**க. இறைவன்,**
உப தலைவர்

*With Best Compliments from*



*With Best Compliments*

*from*

Dudly Thambinayagam

*With Best Compliments from*

# Umesh Trade

## General Merchant

No. 24, 4th Cross Street,
Colombo - 11

*With Best Compliments from*

# Soby Communication & Travels

No. 54, Hampden lane,
Wellawatte,
Colombo - 06

# ஆசிரியர் நலன்புரிச் சங்கத்தின் சார்பில்
# உளம் மகிழ்ந்து வாழ்த்துகிறேன்



யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி 1894ம் ஆண்டு ஆங்கில மொழிமூல உயர்நிலை பாடசாலையாக உருவாகி பல்கலைக்கழக புகுமுக பரீட்சையிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் அன்றும் இன்றும் சாதனைகள் படைத்து உலகெங்கும் தன் தனித்துவத்தை நாட்டியுள்ளது.

ஸ்கந்தா அன்னையின் ஒளி என்றும் ஒளிர்ந்திட வேண்டும் என்ற வகையில் தமது சேவையையும் நன்றியறிதலையும் இன்றைய மாணவர் சமூகத்துக்கு வழங்கி மகிழ்வுறும் பழைய மாணவர் சங்கங்கள் வரிசையில் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கமானது 2002ம் ஆண்டில் கல்லூரி வளாகத்தில் ஸ்கந்தப் பெருமானுக்கு ஆலயம் அமைத்து கும்பாபிஷேகம் கண்டு மகிழந்தது.

மாணவர் நலன் புரிச்சேவை தொடர்பாக வருடாந்த இலவச மருத்துவமுகாம் அமைத்து நோயற்ற மாணவர் சமூகம் உருவாக வழிகாட்டுகிறது. மேலும் கல்லூரி மாணவர்கள் தென்னிலங்கை நோக்கி பயணிக்கும் போதினில் அன்புடன் வரவேற்று மாணவர் மனம் மகிழவைக்கிறது.

சிறந்த சேவையாளரையும் செய்நன்றி மறவா பண்புநிலை கொண்ட பெருந்தகைகளையும் கொண்ட கொழும்பு பழைய மாணவர் சங்கம் தனது வெள்ளிவிழாவை சிறப்புடன் கொண்டாடுவது கண்டு பேருவகை அடைவதும் ஸ்கந்தப் பெருமானின் அருள் ஆசியுடன் தலைநகரில் என்றும் வளமுடன் நின்று அன்னைக்கு சேவை வழங்கிட வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

**திருமதி சாந்தினி நாகராஜன்** S.L.T.S-1
O.S.A. Member, Chunnakam

# கல்விவளர்ச்சியில் சமூகவளங்கள்



சமூகம் என்பது பல்வேறு விதமான குழுக்களின் கூட்டாகும். ஒவ்வொரு சமூகத்திற்கும் தனித்துவமான கட்டமைப்புகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு சமூத்திற்கும் தனித்துவமான கட்டமைப்புகள் ஏற்றத் தாழ்வுகள் காணப்பட்டாலும், அந்தந்தச் சமூகத்தை உயர்வடைய வைக்கும் சக்தி கல்விக்குஉண்டு என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

"கற்றவனுக்கு சென்றவிடமெல்லாம் சிறப்பு!" என்ற கூற்றை நோக்கினால் சமுதாய மேம்பாட்டிற்கு கல்வியின் அவசியத்தை உணர்ந்து கொள்ளலாம்.

- கல்வியானது மனித சமுதாயத்தை ஆற்றுப்படுத்தும்;
- கல்வியானது இன்றைய இளைஞர்களை நாளைய நல்ல தலைவர்களாக்கும்;
- கல்வியானது நல்ல பண்பாளர்களாக்கும்!

எனவே சமூகத்தின் மேம்பாட்டிற்கான கல்வி வளர்ச்சியில் சமூக வளங்களைப் பயன்படுத்திக் கொள்வது அத்தியாவசியமாகிறது. அந்த வளங்களை இனங்கண்டு அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அந்த வகையில் வளங்கள் பல்வேறுபட்ட தோற்றப்பாடுகளில் காணப்படும். உதாரணமாக சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ,உதவும் கரங்கள் ,நல்ல சிந்தனையாளார்கள், புலம்பெயர்ந்தோர், புத்திஜீவிகள் ,துடிப்பான இளைஞர்கள், அனுபவம் மிக்க முதியோர், வினைத்திறன் மிக்க ஆலோசகர்கள், தொழில்நுட்ப ஆர்வலர்கள் - இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

இவற்றில் கல்வி வளர்ச்சிக்கான ஏதோவொரு வளம் மறைந்து உள்ளது. அதனை சரியான வகையில் கண்டுபிடித்துக் வெளிக் கொணர வேண்டும். அவ்வாறு வெளிக் கொணரப்படும் வளங்கள் வீண் விரயமாகாமல் சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்கு முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு வெளிக் கொணரப்படும் வளங்கள் நிதிவளமாகவோ, பௌதீகவளமாகவோ, தகவல் வளமாகவோ, தொழில்நுட்ப வளமாகவோ, ஆலோசனை வளமாகவோ, சேவைசார் வளமாகவோ இருக்கலாம்.

இவ்வரிய வளங்கள் கல்வி வளர்ச்சிக்கும், அதனூடாக சமுதாய வளர்ச்சிக்கும் ஏதோ ஒருவகையில் உதவி புரிவதாக அமையும். அவை தக்க முறையில் வடிவமைக்கப்பட்டு கல்வி வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

'ஸ்கந்தாவின் மைந்தன்'
**த.அரியரத்தினம்**
ஓய்வுநிலை, ஸ்ரீ லங்கா திட்டமிடல் சேவை,
சமாதான நீதவான் (அகில இலங்கை)

## நற் பழக்கங்கள் முக்கியம்

## கற்றுக் கொடுக்க வேண்டியது கடமையல்லவா!

நல்ல பழக்கங்களுடன் நடந்து கொள்ளும் குழந்தைகள், பெற்றோருக்கும் பெருமை சேர்ப்பவர்கள். நல்ல பண்பாளர்கள் வாழ்க்கையில் தோற்கமாட்டார்கள். உலகின் எந்த மூலைக்கு சென்றாலும் அவர்கள் மதிக்கப்படுவார்கள். ஐந்து வயதிற்குள் பின்வரும் நடத்தை முறைகளைக் குழந்தைகளுக்குப் போதியுங்கள்:

- யாருடைய பொருளையும் (அது அம்மா, அப்பாவினுடையதாக இருந்தாலும்) முன் அனுமதி பெற்ற பின்னரே எடுக்கச் சொல்லுங்கள்.
- கவனிக்க கற்றுக் கொடுங்கள். யார் பேசும் போதும் முழுமையாக கேட்டு விட்டுப் பிறகு பதில் அளிக்கப் பயிற்றுவியுங்கள்.
- யாரையும் கிண்டல் செய்து சிரிக்க அனுமதிக்காதீர்கள். வீட்டிலோ,பொது இடத்திலோ யாரையும் கிண்டல் செய்வது அவர்களைக் காயப்படுத்தும் என்பதைப் புரியவையுங்கள்.
- செய்த தவற்றை உணர்ந்து மன்னிப்புக் கேட்கப் பழக்கப்படுத்துங்கள். போகிற போக்கில் மன்னிக்கவும் (Sorry) எனச் சொல்வது பயனளிக்காது. மீண்டும் அதே தவற்றைச் செய்வார்கள்.
- கதவைத் தட்டி விட்டுவரச் சொல்லுங்கள். அந்தரங்கம் (Privacy) எல்லோருக்கும் அவசியமானது. அனுமதி கிடைக்கிற வரையில் வாசலில் நிற்கச் சொல்லுங்கள். ஓழிவந்து கதவைத் தட்டிக் கொண்டே இருப்பது தவறானது. இதைப் பழக்கப்படுத்த எளிய வழி, நீங்கள் அதைப் பின்பற்றுவதே!
- பிறருக்கு உதவி செய்யும் கருணையோடு இருக்கவும் பழக்கப் படுத்துங்கள்.
- தேவைப்படும் நேரத்தில் அமைதியாக அமர்ந்திருக்கப் பழக்குங்கள். குழந்தைகளுக்கு இது கஷ்டம்தான். என்றாலும் சூழலைப் புரிய வைத்தால் அதற்கு ஏற்ப நடந்து கொள்ளப் பழகிவிடுவார்கள்.
- வயதில் பெரியவர்களையும், ஆசிரியர்களையும் மதிக்கச் செய்யுங்கள்.
- மென்மையாகப் பேசுவதன் அவசியத்தைக் குழந்தைகள் உணர வேண்டும். கத்துவது, அலறுவதெல்லாம் சரியாக பேசும் முறைகளல்ல. ஆனால் நாம் அவ்வாறுதான் நடந்து கொள்கிறோம் என்பதால் குழந்தைகள் அதையே பின்பற்றுகின்றன.
- கோபமாக இருந்தால் தணிந்தவுடன் அமைதியாக பேசுங்கள். குழந்தையும் அதையே பழகும்.
- உரையாடலின் போது பேசுவதை முடிக்கும் வரை காத்திருந்து எதிர் வினையாற்றச் சொல்லித் தாருங்கள்.
- வயதில் பெரியவர்களையும், ஆசிரியர்களையும் மதிக்கச் செய்யுங்கள்.
- யாரையும் தாழ்வாக நினைக்கவோ நடத்தவோ கூடாது எனக் கற்பியுங்கள்.

- ஆசிரியருக்கும், துப்பரவு வேலை செய்பவருக்கும் ஒரே மாதிரியான மரியாதையைக் கொடுக்கச் செய்யுங்கள்.
- சமத்துவத்தைக் கடைப்பிடிப்பது நற்பண்புகளில் மேன்மையானது.
- எண்ணங்களை, திறமைகளை, நேரத்தை, பொருட்களை பிறரோடு பகிர்ந்து கொள்ள கற்றுத் தாருங்கள். மனம் இலகுவாகும்.
- பிறருக்கு உதவ ஊக்கப்படுத்துங்கள். எல்லாம் தனக்கே வேண்டும் என்ற சுயநலம் இதனால் அழிகிறது.
- அன்பிற்குரியவர்களோடு நேரம் செலவிட அனுமதியுங்கள். உறவு மற்றும் நட்புகளின் வழியே மனிதர்களை மதிக்க அவர்களின் சுகதுக்கங்களைப் பகிர, குழந்தை பழகுகிறது.
- இயற்கை சூழ் பகுதிகளுக்கு அழைத்துச் செல்லுங்கள். இந்த பூமியில் உள்ள பல்லாயிரம் கோடி மரங்கள், பறவைகள், விலங்குகளோடு தானும் ஒரு அங்கம் என்ற புரிதல் வளரும். பூமியை அழிக்கும் சுயநலம் அழியும்.

**திரு. குமார் துரைசிங்கம்**
பொருளாளர்
கொழும்பு பழைய மாணவர் சங்கம்.

"நன்மை தீமைகளைக் கண்டு கொள்ள இரண்டு கண்கள்;
முன்னால் போகவும், பின்னால் நகரவும் இரண்டு கால்கள்;
கொடுக்கவும், வாங்கவும் இரண்டு கைகள்; - ஆனால்
நல்லதை மட்டும் சிந்திக்க ஒரே மனம்!
நல்லதை மட்டுமே பேச ஒரே வாய்!
இறைவனின் படைப்பிலே மிகுந்த அர்த்தமுண்டு!"

*- கவியரசு கண்ணதாசன் -*

## யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரியின்
## காலஞ்சென்ற ஆசிரியர்களின் நினைவேந்தல்கள்















முன்னைநாள் அதிபர் திரு. வி. சிவசுப்பிரமணியம் (வைசர்) அவர்களின் 100வது பிறந்ததின நினைவு விழாவின் சில நினைவலைகள்












### யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவர் கொழும்புச் சங்கத்தினால் கொழும்பில் நடாத்தப்பட்ட சங்க நிகழ்வுகள்



















## ஸ்கந்தாவில் பழைய மாணவர்கள்















**ஸ்கந்தா ஆரம்பப் பாடசாலைக்கு திரு. எஸ். மகேந்திரனால் வழங்கப்பட்ட கணனியை கைளிக்கும் நிகழ்வு**




**ஸ்கந்தா பழைய மாணவர்களின் நினைவலைகள்**




With Best Compliments from
Discover the Locations that Embraces the Ultimate Luxurious Living
from
Sri Lanka's Largest Property Developer
Real Estate • Construction • Facilities Management
Blue Ocean GROUP OF COMPANIES
for more details www.blueocean.lk
BEST DEVELOPER (Sri Lanka) Asia Property Awards 2017
Blue Ocean Group always known for winning Best Local and International Renowned Accolades for their Construction and Corporate Excellence
10+ Cities
35+ Projects
1250+ Units
Our Own Construction Contractor
LINK
Link Engineering
37 YEARS OF EXCELLENCE
First (1st) Class
Luxurious Condos @
No. 45, Alfred House Gardens, Col 03
No. 06, 19th Lane, Colombo 03
No. 121, Inner Flower Road, Colombo 03
No. 15A, Layard's Road, Colombo 04
No. 73, Gergory's Road, Colombo 07
No. 02, Glenfall Road, Nuwara Eliya
Business Class
Luxurious Condos @
No. 08, Jayasinghe Road, Colombo 05
No. 30, Hotel Road, Mount Lavinia
No. 06, De Alwis Avenue, Mount Lavinia
No. 34/2, De Serem Road, Mount Lavinia
Economy Class
Luxurious Condos @
No. 31, De Alwis Place, Dehiwala
No. 37/2, Beach Road, Mount Lavinia
No. 15, Lillian Avenue, Mount Lavinia
No. 19, Barnes Avenue, Mount Lavinia
Inner Flower Road, Colombo 03
Layards Road, Colombo 04
19th Lane, Colombo 03
De Alwis Avenue, Mt. Lavinia
Alfred House Gardens, Colombo 03
+94 777 546 546
+94 777 755 323
+94 777 121 926
+94 777 121 923
+94 777 121 916
+94 772 216 617
+94 777 402 070
Head Office Sri Lanka
Platinum Branch Sri Lanka
Int. Branch United Kingdom
Int. Branch Austraila
Int. Branch United Arab Emirates
Int. Branch Canada

*With*

*Best Compliments*

*from...*



**FACILITIES AVAILABLE**

24 HOURS OPD & LABORATORY SERVICE

CHANNELED CONSULTATION SERVICE

ULTRA-SOUND SCANNING

E.C.G., X-RAY, DENTAL X-RAY

INTENSIVE CARE UNIT

OPERATING THEATRE

MATERNITY & LABOUR CARE

DENTAL & ORAL CARE

EYE & CATARACT SURGERY

# ROYAL HOSPITAL (PVT) LTD

*Care... when and where you need it most*

62, W.A. Silva Mawatha, Wellawatte, Colombo 06.

Tel: 2586581, 2584212, 2597565, 2559268 | Fax: 2597698 | E-mail: manager@royalhospitals.com

*With Best Compliments from*

# NEW LANKA MATERNITY HOSPITAL & IVF CENTRE

## 24 HOUR MATERNITY SERVICES

Infertility Treatment

Well Women Clinic

Pregnancy Care

Child Birth

Caesarian Operations

Laparoscopic Surgeries

9, Bambalapitiya Drive, Colombo 04.



ஸ்கந்தா, மகாஜனா கல்லூரிகளுக்கிடையிலான வருடாந்த பெருந்துடுப்பாட்டப் போட்டி ஆரம்ப விழாவிற்கு சங்க உறுப்பினர் திரு முத்தையா கதிர்காமநாதன் தம்பதிகள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த போது.



ஸகந்தா. மகாஜனா கல்லூரிகளுக்கிடையிலான வருடாந்த பெருந் துடுப்பாட்டப் போட்டி 1994 ஆரம்ப விழாவிற்கு சங்க உறுப்பினர் திரு எஸ். மகேந்திரன் தம்பதிகள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த போது.



ஒரேற்ற சுப்பிரமணியம் அவர்களின் 100வது பிறந்தநாள் நிகழ்வு கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்றபோது ஒழுங்கமைப்பு குழுத் தலைவர் திரு. எஸ். பத்மநாதன் நன்றி உரை நிகழ்த்துவதைக் காணலாம்.



1994ஆம் ஆண்டு நடைபெற்ற வருடாந்த பெருந்துடுப்பாட்டப் போட்டியில் வெற்றிபெற்ற அணியினருக்கு பிரதம அதிதி திரு எஸ். மகேந்திரன் பரிசுக் கேடயம் வழங்கும் காட்சி



திரு எஸ். கதிர்காமத் தம்பி அவர்களின் தலைமையில் நிகழ்ந்த எமது சங்கத்தின் 2002ம் ஆண்டு வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கு வருகைத் தந்த கல்லூரி அதிபர் திரு. கே. சிவாஜி அவர்களை வரவேற்கும் காட்சி.



# நிறுவனங்களிலான மாற்ற முகாமைத்துவம்
# CHANGE MANAGEMENT

## அறிமுகம் – Introduction

விரும்பப்பட்ட நோக்கத்தினை அடைந்து கொள்ளும் வகையில் மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து நபர்களை வழிநடத்தி செல்வதற்கான கட்டமைக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் முறைகளின் பிரயோகமே மாற்ற முகமைத்துவம் ஆகும்.

இன்றைய சூழ்நிலையில் மாற்றம் என்பது ஒரு சாதாரண விடயமாகும். உண்மையான வெற்றியாளராக இருப்பதற்கு நிறுவனம் சந்தையில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்ளுதல் அவசியம். எனவே நிறுவனத்திலுள்ள நபர்கள் மாற்றங்களுக்கு தடையாக இருக்காது மாற்றங்களுக்கு இணங்கிச் செல்லக்கூடியவர்களாக இருக்க வேண்டும்.

## மாற்றக் காரணிகள் – Change Factors

மாற்றத்தை உருவாக்கும் காரணிகள் மாற்றக்காரணிகள் ஆகும். இது அடிப்படையில் 2 வகைப்படும்

1. உள்ளக மாற்றக்காரணிகள்
2. வெளியக மாற்றக்காரணிகள்

உள்ளக மாற்றக்காரணிகள் என்பது நிறுவனத்திற்குள்ளே மாற்றத்தை உருவாக்கும் காரணிகள் ஆகும். நிறுவன பலவீனங்கள் மற்றும் வினைத்திறனின்மை என்பவற்றை சரிப்படுத்துவதற்கு உள்ளக மாற்றம் அவசியமாகும். உதாரணமாக ஒரு நிறுவனம் தனது பிரதான போட்டியாளருடன் மட்டக்குறி அளவை செய்து கொள்ளும் போது அதன் உள்ளக பலவீனங்களை அறிந்து கொள்ளலாம். அவற்றைத்திருத்த மாற்றம் அவசியமாகும்.

வெளியக மாற்றக்காரணிகள் என்பது நிறுவனத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் புறக்காரணிகளைக் கருதும். உதாரணமாக நிறுவனம் தொடர்பான வாடிக்கையாளர் முறைப்பாடு அதிகரித்தல்.

## வெற்றிகரமான மாற்றத்திற்கு அவசியமான காரணிகள் :

றிச்சட் டாப்ட் 1998 என்ற அறிஞ்ஞரது கருத்துப்படி வெற்றிகரமான மாற்றத்திற்கு அவசியமான காரணிகள் வருமாறு.

1. மாற்றத்திற்கான தேவை இருத்தல் - நிறுவனத்திலே எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றிற்கும் உண்மையான பெறுபேற்றிற்கும் இடையில் வேறுபாடு காணப்படும் போது முகாமையாளர்கள் மாற்றத்திற்கான தேவையை இனங்கண்டு கொள்கின்றனர்.
2. மாற்றம் அடைதல் - தீர்மானம் மேற்கொள்பவர்கள் எதிர்வு கூறப்பட்ட மாற்றத்திற்கு இணங்கிச் செல்வதற்கு முடிவெடுக்கும் போது மாற்றம் உருவாகின்றது. பிரதான

ஊழியர்கள் மற்றும் முகாமையாளர் மாற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவது அவசியமாகும்.

3. வளங்கள் இருத்தல் - மாற்றம் தானாக ஏற்படுவது இல்லை. எனவே அதற்கு வளங்கள், நேரம், வடிவமைப்பு, திட்டமிடல், அமுல்ப்படுத்தல் என்பன அவசியமாகும். மேலும் விசேட நிதி ஒதுக்கீடும் தேவைப்படும்.

## மாற்றத்தின் வகைகள்

1. திட்டமிட்ட மாற்றம் - சூழல் காரணிகளை கவனமாக ஆய்வு செய்த பின்னர் மேற்கொள்ளப்படும் மாற்றம் திட்டமிட்ட மாற்றம் ஆகும். இது சூழல் ஸ்திரமானது என எடுகோள் கொள்கின்றது.
2. அவசரமாற்றம் - மாற்றம் தொடர்ச்சியானது, எதிர்வுகூற முடியாதது, வரையறுக்க முடியாதது என்பதுடன் சூழல் நிலையற்றது எனவும் எதிர்வு கூறமுடியாதது எனவும் எடுகோள் கொள்கின்றது.
3. வளர்ச்சிமுறை மாற்றம் - விற்பனை வளர்ச்சி, தொழினுட்ப வளர்ச்சி போன்ற சூழல் போக்குகளுக்கு ஏற்ப செய்யப்படும் மாற்றங்கள் வளர்ச்சிமுறை மாற்றமாகும். இது இறுதி வெளியீட்டை நோக்கி மேற்கொள்ளப்படும் ஒரு சிறிய மேம்பாட்டைக்குறிக்கும்
4. படிமுறை மாற்றம் - குறித்த காரணி ஒன்றின் போக்கு நிறுத்தப்பட்டு நிறுவனத்தின் நடவடிக்கையிலே மேல்நோக்கிய அல்லது கீழ்நோக்கிய எதிர்பார்க்கப்படாத பாய்ச்சல் ஒன்று ஏற்படுவதாகும். உதாரணமாக ஆசியாவில் சுனாமி அனர்த்தத்தின் பின்னரான மாற்றம்
5. நிலைமாறும் மாற்றம் - ஒரு மாற்றம் அவசியமாக உள்ள போது நிறுவனம் தற்போது உள்ள கட்டமைப்பிற்கு அப்பால் செயற்படுவது ஆகும். இந்த மாற்றம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட வேண்டுமாயின் ஒரு பாரிய கலாசார நகர்வு அவசியமாகும். உதாரணமாக ஒரு வங்கி தனது 100 கிராமிய கிளைகளை மூடி இணையவழி வங்கி முறைமையினை ஆரம்பித்தல்.

## மாற்றத்திற்கான தடைகள்

1. மாற்றத்தின் இயல்பு மற்றும் அதற்கான காரணம் ஆகியன தொடர்பாக புரிந்துணர்வின்மை.
2. நிறுவனத்தின் மாற்றத்திற்கான கிரயம் மற்றும் நன்மைகள் பொருந்தாமை.
3. மாற்றத்தை ஏற்படுத்துபவர்கள் மற்றும் அவர்களது நோக்கத்தில் நம்பிக்கையில்லை.
4. சில தனிநபர்கள் மாற்றத்திற்கு ஈடுகொடுக்கும் சகிப்புத்தன்மையைக் கொண்டிருக்காமை.
5. வேலையாட்களினால் ஏற்படுத்தப்படும் தடைகள்.
6. ஊழியர்களுடன் கலந்துரையாடாது மாற்றம் கொண்டுவரப்படல்.
7. உறவு முறைகள் பாதிக்கப்படும் என்ற பயம்.

## மாற்றத்திற்கான தடைகளை எதிர்கொள்ளும் வழிகள்

1. கல்வி மற்றும் சிறந்த தொடர்பாடல் ஊடாக
2. பங்குபற்றல் மற்றும் ஈடுபடுத்தல் ஊடாக
3. வசதிப்படுத்தல் மற்றும் ஆதரவு வழங்கல் ஊடாக
4. பேரம் பேசல் மற்றும் உடன்பாடு ஊடாக
5. திறமையாக கையாளல் மற்றும் ஒத்துத் தேர்ந்து கொள்ளுதல் மூலம்
6. வெளிப்படையான மற்றும் உள்ளார்ந்த தண்டிப்பு ஊடாக

## மாற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்கச் செய்வதற்காக ஊழியரை ஊக்குவிக்கும் வழிகள்

1. ஊழியர்களுடன் வெளிப்படையாக இருத்தல்
2. தொடர்பாடல் வரிசைகளை திறந்து வைத்திருத்தல்
3. மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான தேவை குறித்து தெளிவாக இருத்தல்
4. பொறுப்பு கூறலை ஏற்படுத்தல்
5. உண்மையாக இருத்தல்

## நிறுவனங்களில் மாற்றத்தை முகாமை செய்வதற்கான

KURT lewin's Three step model

இவர் மூன்று படிமுறையில் மாற்றத்தை கொண்டு வரவேண்டும் என குறிப்பிடுகின்றார். அவை

1. உருகவைத்தல் - Unfreezing

   இது மாற்றத்திற்கான தேவையை ஊழியர்களிற்கு புரியவைப்பதை கருதும். அதாவது மாற்றத்தின் அனுகூலங்களை ஊழியர்களுக்கு புரியவைக்க வேண்டும்.

2. மாற்றம் - Change

   இது வேலையிடத்தில் மாற்றத்தை அறிமுகப்படுத்துவதை குறிக்கும்.

3. மீள் உறைய வைத்தல் - Refreezing

   ஊழியர்[illegible] புதிய முறைமையை பின்பற்றுவதை உறுதி செய்வதற்கான பொறிமு[illegible]றகளை ஏற்படுத்துவதை இது கருதும்.

## முடிவுரை

மாற்றம் [illegible]ற ஒன்றே நிலையானது. தொடரானது. மாற்றம் அடைய விரும்பாத எந்த நிறுவன[illegible] சந்தையில் நிலைபெற முடியாது. எனவே பொருத்தமான நேரங்களில் எல்லாம் மாற்றத்திற்கு தயாராக வேண்டும்.

**திரு.வ.நந்தீஸ்வரன்**

(B.B.A (Hons), Dep in Edu, M.ed(Merit), DSM(Merit), SLPS - 2,

## ஸ்கந்தா மைந்தர்களின் சங்கமம் - 2008

### நினைவலைகளின் மீட்பு












# “என் இனிய கல்லூரித் தாயே....”

ஈழ மணித் திரு நாட்டின் வடபாலமைந்த சைவத் தமிழ் பாரம்பரியத்தை உயிர் மூச்சாக வந்தது. கல்வி, கலை, பண்பாடு, விளையாட்டு, ஒழுக்கம் என அனைத்திலும் தனித்துவம் படைத்து நீடித்து நிலைத்த புகழ் பெற்ற எங்கள் ஸ்கந்தவரோதயாக் கல்லூரித் தாயே. பொலிவுடன் மாணவர் கூடி போற்றி செய்வோம். “உண்மையே உயர் அறம்” என்னும் மகுட வாக்கியத்தை தாங்கி மாணவர்களை பல உயர் பதவிகளை வகுக்கச் செய்த ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் கொடி காற்றில் பறந்து தனது புகழை எங்கும் பரப்புகின்றமையை இட்டு பெருமையடைகின்றேன். கிராமப் புறத்திலே அமைந்தாலும் விஞ்ஞான கல்வியிலே தலை சிறந்த ஒரு கல்லூரி. இது இலங்கையில் பழைய இராசதானி என்ற செட்டு இருக்கத்தான் செய்கிறது. இந்தப் பழமையின் சாயலோ என்னவோ இக் கல்லூரி ஒரு தேசிய நிறுவனமாக இன்று விளங்குகின்றது என்பது ஸ்கந்தவரோதயர்கள் என்று பெருமை அடையக் கூடிய விடயமாகும்.

பல்வகையிலும் தனிப் பெருமையுடன் விளங்கும் இக் கல்விக் கூடத்தை கந்தையா உபாத்தியாயர் அவர்கள் 1894 ஆம் ஆண்டு நிறுவினார். கந்தையா உபாத்தியாயர் அவர்கள் தன்நலம் மறந்து தமிழ் இன நலன் கருதித் தம்மை தியாகம் செய்தார். இப் பெரியாருடைய தியாகத்தின் ஒரு பகுதி மாணவரிடையே பரவினால் அதுவே கல்வியின் சிறப்பு. ஸ்கந்தவரோதயாக் கல்லூரி இன்று புகழ் பெற்ற கல்லூரியாக விளங்குவதற்கு காலாக இருப்பது இதனை தொடக்கத்தில் நடத்தி சென்ற பெரியார்கள் இட்ட அத்திவாரம். கந்தையா உபாத்தியாயர் நிறுவிய கல்லூரி பலமுள்ளதாக வளர்வதற்கு அவருக்கு வேறு இருவர் உறுதுணையாக இருந்தனர். ஒரு குறிக்கோளோடு ஒன்று சேர்ந்து தொழிலாற்றிய இம் மூவரையும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் மும்மூர்த்திகள் எனக் கூறுவது வழக்கம். கந்தையா உபாத்தியாயர், செல்லப்பா உபாத்தியாயர், சீனி உபாத்தியாயர் ஆகிய மூவரும் ஒற்றுமையுடன் கல்லூரி நன்மைக்காக உழைத்தமை எமக்கு முன் மாதிரியாக அமைந்துள்ளது.

ஸ்கந்தா வரலாற்றில் ஒரு எட்ட முடியாத உயர்வை அடைந்த பெருமையை உடையவர் அதிபர் ஒரேற்றர் சுப்பிரமணியம் ஆவார். ஸ்கந்தா வரலாற்றில் ஒரேற்றர் காலம் என்று பேசப்படும் அளவுக்கு இவரது காலம் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. வகுடெடுத்த இழுத்த தலை, கறுப்பு நிறக் கண்ணாடி, வெள்ளை வேட்டி, உத்திரியம் மடிந்த சால்வை, தெளிந்த நீரோடையான ஆங்கில் பேச்சுடன் இன்றும் அவர் தம் மாணவர் மனதில் உள்ளார் என்றால் அது ஒரு சொல்லற்கரிய விடயமாகும். 1944ல் ஒரேற்றர் அதிபர் பதவி ஏற்ற போது 225 மாணவர்களையும் 16 ஆசிரியர்களையும் கொண்டிருந்த ஸ்கந்தாவை 1962 இல் அவர் ஓய்வு பெறும் போது 2045 மாணவர்களையும் 61 ஆசிரியர்களையும் கொண்டிருந்த ஸ்கந்தாவாக மாற்றிய பெருமை இவரையே சாரும். வகுப்புகள் பற்றாக்குறையுடன் இயங்கிய ஸ்கந்தாவின் மாணவர் அதிகரித்த போது இலங்கை தீவில் எங்கும் இல்லாத இரு நேர பாடசாலை முறையை அறிமுகம் செய்தார் அதிபர் ஒரேற்றர். 1944இல் ஒரேற்றர் காலத்திலேயே

முதலாவது மருத்துவ பீட மாணவன் பல்கலைகழகத்துக்கு காலடி எடுத்து வைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரின் சாதனைகளும் அர்ப்பணிப்புகளும் வெற்றிகளும் சொல்லில் அடங்காதனவாகும்.

வாழ்க்கையில் குறிக்கோளை அடையும் வழி கல்வியே ஆகும். கல்வியே வாழ்க்கை. வாழ்க்கையே கல்வி ஆகும். கல்வியானது ஆதி காலம் தொட்டு இன்று வரை எல்லோராலும் போற்றப்பட்டு வருகின்றது. உண்மைத்தன்மை, தெய்வீகப் பண்புகள் நிறைந்த மேன்மைகள் கொண்ட கல்வி மனித அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும். கல்வியை வழங்குவதில் பாரிய பங்கினை பாடசாலை கொண்டுள்ளது. அந்த வகையில் யா.ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் சேவை போற்றுதற்குரியதாகும். அந்த வகையில் இச் சிறந்த வேலையினை வழங்குவதில் அதிபர், ஆசிரியர்கள் அவர்களின் பங்கு முக்கியமானதொன்றாகும். க.பொ.த உயர்தரம் என்றாலும் சரி சாதாரணம் என்றாலும் சரி மாணவர்களின் பெறுபேற்றில் பாடசாலை அதிபர், ஆசிரியர் ஒவ்வொருவரினதும் வகிக்கும் பங்கு முக்கியமானதொன்றாகும். ஒவ்வொரு ஆசிரியரும் தமது கடமையை சரிவர செய்வதுடன் மாணவர்களுக்கு தனது அர்ப்பணிப்பான கடமையை வழங்கும் கடப்பாட்டை கொண்டிருக்கின்றனர். கல்வி நிலையில் வெவ்வேறு மட்டங்களில் இருக்கும் மாணவர்களை ஓர் உன்னதமான நிலைக்கு உயர்த்தும் பொறுப்பினை ஆசிரியர்கள் கொண்டிருக்கின்றனர். ஆசிரியர்களையும் மாணவர்களையும் சிறந்த முறையில் வழிப்படுத்துவதுடன் அவர்களை மேற்பார்வை செய்து சிறந்த முகாமைத்துவத்தை மேற் கொள்ளும் கடப்பாட்டை அதிபர் கொண்டிருக்கின்றார்.

நான் கற்ற காலத்தில் அதிபர் ஆறுதிருமுருகன், அதிபர். ஈஸவரதாசன், அதிபர். செல்வஸ்தன் ஆகியோர் கல்லூரியை சிறப்புடன் நடத்தி சென்றனர். ஒவ்வொரு அதிபரும் கல்லூரியின் வளர்ச்சிக்காக அரும் பாடுபட்டனர். அத்துடன் ஒவ்வொரு மாணவனையும் மாணவியையும் தமது பிள்ளைகளாக கருதி அவர்களின் குறை நிறைகளை இனங்கண்டு அவற்றை திருத்தியமைப்பதுடன் அவர்களை சிறந்த முறையில் வழிநடத்தி சிறந்த பெறுபேற்றை பெறச் செய்வதுடன் அவர்களை கல்வி மாத்திரமன்றி விளையாட்டு இணைப்பாட விதானச் செயற்பாடுகள் என அனைத்திலும் சிறந்த நிலையை அடைய எனது அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் அரும் பணி எண்ணற்றது. எனது கல்விப் பராயத்தில் எனது பாடசாலை தேசிய தமிழ் தினப் போட்டியில் தேசிய மட்டத்தில் நாடகப் போட்டியில் முதலிடம் பெற்றதுடன் மற்றும் எமது பாடசாலை மாணவன் யதுசாயன் அவர்கள் உயாதர தொழில்நுட்பப் பிரிவில் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்றதுடன் மற்றும் நீண்ட கால இடைவெளியின் பின் மாணவன் கோகுலன் அவர்கள் 3A பெற்று பொறியியல் துறைக்கு தெரிவாகியுள்ளார்.

இவ்வாறு ஸ்கந்தா கல்வி, ஒழுக்கம், விளையாட்டு என சகல துறைகளிலும் தனக்கென முதலிடத்தை பெற்று வருகின்றது. இதற்கு பல வகையிலும் பழைய மாணவர் சங்கம் எமது பாடசாலைக்கு வழங்கும் உதவிகளுக்கு மிக்க நன்றியை கூறுவதுடன் 25 ஆண்டு நிறைவை கொண்டாடும் கொழும்பு பழைய மாணவர் சங்க சேவை தொடர வாழ்த்துகிறேன்.

**செல்வி. லோகிதா ரவிக்குமார்**
2017 மருத்துவ பீட புதுமுக மாணவி.

## "வெற்றிப் பாதையில் ஸ்கந்தா"

வரலாற்றுச் சிறப்பு மிக்க ஈழநாட்டில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரேயே பேரும் புகழும் பெற்ற பெரு நகரமாக விளங்கியது கந்தரோடையாகும். யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் தெற்கு பிரிவில் சுன்னாகத்திலிருந்து ஒன்றரை கிலோ மீற்றர் தொலைவில் மேற்கு திசையில் உள்ளது இச் சிற்றூர். இங்கு 1894 ஆம் ஆண்டில் திரு. கந்தையா உபாத்தியார் என்னும் பெருமகன் கந்தரோடை ஆங்கிலப் பாடசாலை என்ற பெயரில் சிறிய கொட்டில்களில் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம் 1935ஆம் ஆண்டு "ஸ்கந்தவரோதயக் கல்லூரி" என்ற பெயர் சூட்டப்பட்டு வீறு நடைபோடுகிறது.

"உண்மையே உயர் அறம்" என்ற மகுட வாக்கியத்தை தாங்கி மாணவர்களை உண்மை, நல்லொழுக்கம், கலாசாரங்களை பேணுதல், கீழ்ப்படிவு முதலான உயர் பண்புகளுடன் கல்வி, கலை மற்றும் விளையாட்டு போன்ற துறைகளில் உயர் விருத்தியுடைய மாணவர்களை உருவாக்கும் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நானும் மாணவனாக கற்ற நாட்களை எண்ணி மகிழ்வடைகிறேன். கல்லூரியினுள் காலடியெடுத்து வைக்கும்போது அழகிய நுழைவாயில், ஸ்கந்தன் கோவில், ஸ்தாபகர் உருவச் சிலைகள், அழகிய மூன்று மாடி கட்டிடத்தை கொண்ட அதிபர் அலுவலகம் (கந்தையா உபாத்தியாயர் மண்டபம்) அழகிய செப்பனிடப்பட்ட பாதைகள், விளையாட்டு மைதானம், சித்திரக்கூடம், நான் கல்வி கற்ற சிவாஜி மண்டபம், மகிந்தோதய ஆய்வு கூடம், வேப்பமர நிழல் இவை அனைத்தும் மறக்க முடியாது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தின் கல்வி மறுமலர்ச்சியை மேம்படுத்துவதற்கு உருவாக்கப்பட்ட உயர் நிலை கல்லூரிகளில் ஸ்கந்தாவும் ஒன்று என்றால் அது மிகையாகாது. ஆங்கில மொழி மூலப் பாடசாலையாக எழுந்து, பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சையில் எல்லோராலும் பேசப்படுகின்ற கல்லூரியாக விளங்குகிறது. இன்று கல்வித்துறையில் மட்டுமல்ல விளையாட்டுத்துறை, கலை இலக்கியத்துறைகளில் குறிப்பாக நாடகத்தில் தொடர்ச்சியாக தேசிய ரீதியில் வெற்றி பெற்று சாதனையை நிலை நாட்டியுள்ளது.

எமது கல்லூரி கிராமப் புறத்தில் அமைந்திருந்தாலும் இங்கு உயர் தரத்தில் விஞ்ஞானப் பிரிவு, கணிதப் பிரிவு, வர்த்தகப் பிரிவு, கலைப் பிரிவு தற்போது தொழில்நுட்ப பிரிவுகளில் தலை சிறந்த ஒரு கல்லூரியாகும். கந்தரோடை, இலங்கையின் பழைய இராசதானி என்ற பெருமை இக்கல்லூரிக்கு இருக்கத்தான் செய்கிறது. அந்த பழமையின் சாயலோ என்னவோ இக்கல்லூரி பற்றி எல்ரோராலும் பேசப்படுகிறது. ஒறேற்றர் சுப்பிரமணியம் ஐயா காலம் தொடக்கம் இன்று வரை கல்லூரியின் சாதனைகளுக்கு வித்திட்ட அதிபர், ஆசிரியர்களை வாழ்த்தி வணங்குகிறேன். நான் கல்வி கற்ற காலத்தில் (2008 – 2016) எனது அதிபர்களாக இருந்த மதிப்பிற்குரிய திரு. கே.சிவாஜி, கலாநிதி ஆறுதிருமுருகன், உயர்திரு ஆர்.ஈஸ்வரதாசன், திருமிகு எம்.செல்வஸ்தான் ஆகியோரின் வழிகாட்டலில் கல்லூரி மேலும் பல சிறப்புக்களை பெற்றது.

தேசிய கல்வி அமைச்சினால் கல்வி பொதுத் தராதர உயர்தரத்தில் (A/L) தொழில்நுட்பப் பிரிவு (Technology) என்ற பாடத்துறை புதிதாக அறிமுகம் செய்யப்பட்டது. வலிகாமம் வலயத்தில் ஒரு சில பாடசாலைகளுக்கு மட்டும் இப்புதிய பிரிவு ஆரம்பிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டது. எமது கல்லூரிக்கு இப்புதிய பிரிவு (Technology) ஆரம்பிப்பதற்கு அனுமதியளிக்கப்படவில்லை. இக்காலத்தில் (2013) அதிபர் உயர்திரு இ.ஈஸ்வரதாசன் அவர்கள் கல்லூரியின் வளர்ச்சிக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றினார். இவர் கல்லூரியின் மைந்தன் என்பதால் 24 மணி நேரமும் ஸ்கந்தாவிலே தங்கி நின்று சேவை ஆற்றினார். கல்வித்துறையில் நகர்ப்புற பாடசாலைகளுக்கு ஈடாக ஒரு தேசிய மட்ட பாடசாலையாக ஸ்கந்தாவை உருவாக்க வேண்டும் என விரும்பி செயற்பட்டார். எமது கல்லூரியிலும் தொழில்நுட்ப பிரிவு ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற விடா முயற்சியுடன் செயற்பட்டு தேசிய கல்வி அமைச்சிற்கு பல தடவை நேரடியாகச் சென்று எமது கல்லூரியிலும் தொழில்நுட்ப பிரிவை ஆரம்பித்து, அதில் வெற்றியும் கண்டார்.

2014 ஆம் ஆண்டு எமது கல்லூரியில் அறிமுகம் செய்யப்பட்ட தொழில்நுட்ப பிரிவில் நான் உட்பட பதினாறு மாணவர்கள் Engineering Technology ல் கல்வி கற்றோம். 2016ஆம் ஆண்டு நடைபெற்ற உயர்தர பரீட்சையில் எனது நண்பன் கனகசுந்தரம் - யதுசாயன் 3A பெற்று தேசிய மட்டத்தில் முதலாம் இடம்பெற்று "ஸ்கந்தாவின்" வரலாற்று சாதனை பட்டியலில் மீண்டும் ஓர் பதிவை ஏற்படுத்தினார். நான் மாகாண மட்டத்தில் 7ம் நிலையில் சித்தியடைந்தேன். இவ்வாறான வரலாற்று சாதனைக்கு வித்திட்டு ஸ்கந்தாவை மீண்டும் ஒரு தடவை இலங்கை முழுவதிலுமுள்ள கல்விப் புலத்தவர்கள் திரும்பி பார்க்க வைத்த எமது நல் அதிபருக்கு உளமார வாழ்த்துகிறோம்.

அனுபவமும், நிர்வாகத் திறனும் மிக்க அதிபர்கள், அறிவும் ஆற்றலும் அர்ப்பணிப்பும் நிறைந்த ஆசிரியர்கள், ஆர்வமும் துடிப்புமுடைய மாணவர்கள், உதவியும் ஒத்துழைப்பும் நல்கும் பெற்றோர், பழைய மாணவர்கள் போன்றோர்க்கிடையேயுள்ள புரிந்துணர்வும், குழு மனப்பாங்கும் இலட்சியப் பிடிப்புமே ஸ்கந்தாவின் வெற்றிக்கு காரணம் என்றால் மிகையாகாது.

**ஜெ.ஜோயல் ஜெயப்பிரகாஷ்**
University of Sri Jayewardenepura
Engineering Technology – 1st year
(skanda old student)

# யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி சுன்னாகம்

## சில வரலாற்று முக்கிய குறிப்புகள்

கந்தரோடைக் கிராமத்தில் வசித்த பிரபல தனவந்தரும் அதிகார புருஷருமாகிய திரு.வேலுப்பிள்ளை முதலியார் முத்துவேற்பிள்ளை (அப்பாத்துரை) அவர்கள் தமது சொந்த நிலத்தில் கந்தரோடைக் கிராமத்தில் தமிழ் ஆங்கில பாடசாலையை 1892 ம் ஆண்டில் ஆரம்பித்தார் இதில் திருவாளர்கள் சின்னத்தம்பி கந்தையா உபாத்தியாயர்,அம்பலவாண உபாத்தியாயர் ஆகிய இருவரும் முறையே ஆங்கிலமும்,தமிழும் கற்பித்து வந்தனர் இருந்தும் திரு.வே.முத்துவேற்பிள்ளை(முன்னோடி) அவர்கள் தமது முயற்சியால் அதையரிமும், மனச்சோர்வும் அடைந்து முயற்சியை கைவிடத் தீர்மானித்தார்.

தொடர்ந்து 1894 ஆண்டு திருவாளர்கள் சி.கந்தையா உபாத்தியாயரும் அ.கந்தையா உபாத்தியாயரும் 06.06.1894ம் ஆண்டு (தமிழுக்கு ஜய வருடம் வைகாசி மாதம் 25ம் திகதி புதன்கிழமை பூர்வ பட்ச திருதியைத் திதியில் புனர்பூச நட்சத்திரத்தில் அன்று திரு.சு.சீனிவாசகத்தின் (சீனிவாத்தியார்) நிலத்தில் கொட்டில்கள் அமைத்து ஆங்கில தமிழ் பாடசாலையை நடாத்த தொடங்கினர் முறையே ஆங்கில,தமிழ் பகுதிகளுக்கு பொறுப்பாளர்களாகவும் இருந்தனர் அப்பொழுது ஆங்கில பிரிவில் திருவாளர்கள் சு.சீனிவாசகம் உடுவில் பிரபல நொத்தாரிசாக இருந்த ச.பாபதிப்பிள்ளை உருமிபிராய் முத்து ஆகியோர் ஆசிரியர்களாகக் கடமையாற்றி வந்தனர்.

அரசாங்கத்தில் 1898ம் ஆண்டு பதிவு செய்து மேலும் பண வசதிகளைப் பெறவேண்டும் என்ற நோக்கத்தால் ஆங்கில தமிழ் பாடசாலைகளாகப் பிரிக்கப்பெற்று கந்தரோடை ஆங்கில பாடசாலை எனப் பெயர் சூட்டப்பெற்றது.

1) ஸ்கந்தவரோயக் கல்லூரி ஸ்தாபகர் திரு.சின்னத்தம்பி கந்தையா உபாத்தியாயர்
2) ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆரம்பம் 06.06.1894
3) கந்தரோடை ஆங்கில கல்லூரி என 1898ம் ஆண்டு பெயர் வைக்கப்பெற்று அரசாங்கத்தில் பதிவு செய்யப் பெற்றது.
4) கந்தரோடை ஆங்கில கல்லூரி என 1902ம் ஆண்டு அரசினர் அங்கீகாரம் பெற்றது
5) பிரதான மண்டபம் 1907ம் ஆண்டு கட்ட ஆரம்பிக்கப்பெற்றது
6) பிரதான மண்டபம் 1912ம் ஆண்டு அதிகாரி திரு.அ.நாகநாதர் முதலியார் *J.P.U.M* அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது.
7) கனிஷ்ட கேம்பிறிஜ் வகுப்பு பரீட்சைக்கு 1913ம் ஆண்டு மாணவர்கள் அனுப்பி வைக்கப்பெற்றனர்
8) சிரேஷ்ட கேம்பிறிஜ் வகுப்புக்கள் 19..ம் ஆண்டு ஆரம்பிக்கப்பெற்றது
9) சிரேஷ்ட கேம்பிரிட்ஜ் பரீட்சைக்கு மாணவர்கள் 1925ம் ஆண்டு அனுப்பப்பெற்றனர்
10) மகாத்மாகாந்தி 1927ம் ஆண்டு கல்லூரிக்கு விஜயம் செய்தார்
11) 1931ம் ஆண்டு உதைபந்தாட்டமும் விளையாட்டுக்களும் ஆரம்பிக்கப்பெற்றன
12) ஸ்கந்தவரோதயக் கல்லூரி சுன்னாகம் என 07-10-1935ம் ஆண்டு பெயர் வைக்கப்பெற்றது வலிவடக்கில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் முதலாவதாக வந்தது
13) விளையாட்டுத் துறைக்கு 1937ம் ஆண்டு முக்கியத்துவம் கொடுக்கப்பெற்றது

14) 1938ம் ஆண்டு யாழ் உதைபந்தாட்ட சங்கத்தில் பதிவு செய்யப் பெற்றது,மூன்று இல்லங்கள் பிரிக்கப்பெற்றன நாகநாதர்,சுப்பிரமணியம்,இளையதம்பி.

15) கல்லூரி "$B$" வகுப்பு என 1940ம் ஆண்டு தெரியப்பெற்றது, பழைய மாணவர் சங்கம் ஆரம்பிக்கப்பெற்றது.

16) புதிய மைதான வேலைகள் 1943ம் ஆண்டு ஆரம்பிக்கப்பெற்றது

17) சர்வகலாசாலை பரீட்சைக்கு 1945ம் ஆண்டு மாணவர்கள் அனுப்பி வைக்கப்பெற்றனர் பரிசளிப்பு விழாவுக்கு பிரதம விருந்தினராக சுவாமி விபுலானந்தர் வருகை தந்திருந்தார்

18) புதிய மைதானம் 1948ம் ஆண்டு திறந்து வைக்கப்பெற்றது துடுப்பெடுத்தாட்டம் ஆரம்பிக்கப் பெற்றது.

19) (1944 முதல் 1962) வரை ஸ்கந்தாவின் பொற்காலம்

1.பல்கலைக்கழக அனுமதியில் யாழ்மாவட்டத்தில் முதலாவது இடத்தையும் இலங்கை ரீதியாக மூன்றாவது இடத்தையும் பெற்றது.

2.மேற்தரக்கல்லூரியானது கனிஷ்ட பிரிவு பிரிக்கப்பெற்று தனி சிரேஷ்ட கல்லூரியானது

3. இரண்டுநேரக் கல்லூரியானது (6-8வரை -9-13வரை )

4. உதைபந்தாட்டத்தில் முன்நிலையில் நின்றது

5. உலக ரீதியாக தொழில்ஸ்தாபனங்களில் ஸ்கந்தா சமூகம் நிலைகொண்டது

6. சகல துறைகளிலும் உச்சநிலைக்கு சென்றது

7.மேலும் இரண்டு இல்லங்கள் கூட்டப்பெற்றன –மாணிக்கம்,கந்தையா

20) பலகாரணங்களினாலும் கல்லூரி தளர்ந்தது –மீண்டும் வளரத்தொடங்கியது.

21) இயங்காது இருந்த பழையமாணவர்சங்கம் 1983 முதல் புனரமைக்கப்பெற்று 1986 ல் மீண்டும் ஆரம்பிக்கப்பெற்றது

22) 1992 ல் மீண்டும் கனிஷ்டபிரிவு ஆரம்பிக்க வடக்கு கிழக்கு மாகாணசபையால் அனுமதி பெற்றும் தொடங்க முடியவில்லை. – கல்லூரி சார் ப.மா.சங்கம் 2/3 அதிக படியான வாக்குகளை பெற்று முழு இடங்களையும் கைப்பற்றியது.

23) 1993ல் கொழும்பு போன்ற பல இடங்களில் பழையமாணவர் சங்கங்கள் இயங்கத்தொடங்கின.

24) 1994ம் ஆண்டில் நூற்றாண்டு விழா கொண்டாடப்பெற்றது.

<u>நம்பிக்கை பணிப்பாளர் சபை</u>

1) திரு.C.வன்னியசிங்கம் தலைவர் ($M.P$)
2) திரு.வி.தர்மலிங்கம் செயலாளர் ($M.P$)
3) அதிகாரி திரு.அ.நாகநாதர்
4) திரு.v.m.குமாரசாமி
5) டாக்டர்.S.சுப்பிரமணியம்
6) திரு.T.பொன்னம்பலம்
7) திரு.S.சிவசுப்பிரமணியம்
8) திரு.C.சுப்பிரமணியம்

அதிபர்கள்

1) திரு.சி.கந்தையா உபாத்தியாயர் 1892
2) திரு.T.K.பொன்னையா (F.A) 1900
3) திரு.T.வே.சின்னத்தம்பி 1912
4) திரு.S.இளையதம்பி B.A 1912
5) திரு.P.சபாபதிப்பிள்ளை (B.A.K.T) 1917
6) திரு.ஏ.முத்துக்குமாறு (M.A) 1931
7) திரு.M.மாணிக்கம் (Inter science First-class) 1933
8) திரு.V.முத்துக்குமாரு M.A 1934
9) திரு.சி.சிறிநிவாசகம் M.A 1938
10) திரு.M.மாணிக்கம் (Inter science First-class) 1943
11) திரு.S.சிவபாதசுந்தரம் M.A 1943
12) திரு.சி.சுப்பிரமணியம் B.A 1944
13) திரு.சி.சுப்பிரமணியம் B.A.B.Sc 1962
14) திரு.K.சிவகுமாரன் (*Inter science Firsiclass*) 1968
15) திரு.P.ஏகாம்பரம் B.Sc.Dip. 1970
16) திரு.சு.சச்சிதானந்தம் B.A Dip 1973
17) திரு.C.தியாகராஜா B.A. Dip 1976
18) திரு.பொன்.நாகரத்தினம் B.sc Fip 1982
19) திரு.சே.இராசவல்லவன் B.sc.Dip 1989
20) திரு.ச.பொன்னம்பலம் B.sc. Dip 1990
21) திரு.ப.விக்கினேஸ்வரன் B.Sc.Dip.SLEAS 1992
22) திரு.ஆ.கமலநாதன் B.A.Fip 1993

முதலாவது பொறுப்பாசிரியர்கள்

1) திரு.சு.செல்லப்பா 1904 நடத்துத்துறை
2) திரு.ஆ.மாணிக்கம் 1923 விஞ்ஞானத்துறை
3) திரு.சரா.சேதுகாவலர் 1937 விளையாட்டுத்துறை
4) திரு.சோ.சோமசேகரம் 1963 B.A Dip சாரணர் இயக்கம்

தொகுப்பு
சேது.விபுலானந்தா (குட்டி மாஸ்டர்) 1994

குறிப்பு:- விபரங்கள் கல்லூரியில் இருந்த ஆதாரங்கள் அமரர்.சி.சிவசுப்பிரமணியம் வைசர் நெறிப்படுத்தலில் (1993முதல்) மூன்றாவது கட்ட வரலாறு அவர்கள் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் மேடைகளிலும் வெளியிடுகின்றனர். நாங்கள் 2004ம் ஆண்டுமுதல் பிரசுரங்களில் வெளியிடுகின்றோம். -தொடரும்.

# SKANTHA- INFANT TO ADULT HOOD

In 1894 Founder Kandiah Upaathiyayar, at the young age of 23 years realized that, education of the children was the highest form of service and started "Kantharodal English Institute" on' the land belonging to Seenl Upaathiyayar The Founder taught English and Mr. A. Kandlah taught Tamil and Seenl Upaathlyayar was appointed as the Manager. In 1900, Mr. T. K. Ponniah was appointed as Head Master. The School was registered as the Government-In-aid School in 1902. Mr. U. Chellappah served as a teacher in the School and was a tower of strength to the Founder. The Founder Candiah Upaathiyayar, Seenlwasa Upaathiyayar and Mr. Chellapa formed the "triumvirate" which: steered the School through the critical years. Mention must be made about Mr. S. Visvanathan, brother of Dr. P. S (Manager and Grandfather of Sitharthan, M.P) returned after his studies in USA and taught English until retirement in 1931.

Tuition was almost free. This received wide publicity and students from Jaffna and other parts ot the Country came and Joined the School. The students who distinguished themselves include the late Mr. M. M Kulasekaram (later Principal, Royal College) late Mr. V.K. Nathan, later Education Officer, Northern Province.

The increasing numbers in the School, demanded a new building. Foundation for the main hall was laid in 1907 and completed In 1912, Mr. S. Ellyathamby was appointed as Principal. Four candidates sat for the Cambridge Junior School certificate examination, and all of them passed. Special mention must be made about Mr. S. Murugesu who ended as a Civil Servant and Mr. Arulnanthy as Director of Education for the whole Island.

In 1917 Mr. P. Sapapathypillai,B.A, L.T, was appointed as Principal, According to the Inspector ot Schools, at that time Mr. Macre, this was one of the best Schoor, at that time Mr. A. Manlkam, Inter,Science (London), Joined the staff and Science was Introduced as a subject with the small lab. In 1924, Mr. Sapapathipilial left and Mr. Ellyathamby succeeded as Principal. in 1925, Candidates were first presented to Cambridge Senior exam. In 1929 the Funder visited Malaya and collected money for running the School. 1931 Mr. V Muthukumaru, M.A was appointed as Principal and the gave the School a new orientation, tightened the discipline etc. Candldatas were prepared for he London Matriculation Exam In 1935, and labs were remodeled. In the same year, on "Vijayathasami day' the School was named as "Skandawarodaya College". The Founder handed over the School to a Board of Trustees with Dr. S. Subramaniyam, as the Manager.

In 1937, when Mr. Muthukumaru left, Mr.Srinivaasan M.A was appointed as Principal. The College entered the inter - Collegiate Soccer Competition In 1938. The Playing Field was acquired to the south of the College. In 1940 the School was raised to "B" grade. The first School Magazine was published In 1941 and Old Boys Association was inaugurated In the same year. In 1943 Mr. Silvapathasundaram, M.A assumed the duties as Principal and he took steps to coinmence HSC classes and Morining Assemblies were Introduced. Before he could implement his other plans, he left the College to become Inspector of the Schools.

In 1944 a new chapter was Introduced to School with "Orator" Subramanlam assuming as Principal and wiser Mr. V. Sivasubramaniam B.A, Bsc (the, first Old Boy of the School) as Vice Principal. HSC and University Entrance Classes were recognized by Education Department. Mr. T. Kandasamy, Bsc Hons was the first student to enter the University In 1945 (Retired Chief Analyst, in the same year 9 exemptions from London)

Matriculation Exam. In 1947, the School was raised to Grade 1 along with 9 other Schools in Jaffna. On 12th July 1947 old Boys met and Inaugurated the Colombo Branch OBA with Mr. Arulnanthy as President. In 1948, the new Playing Field was formally opened by the Manager, Dr. Subramaniyam, where the first inter -Athletic Sports Meet under the patronage of Dr. F S. The Founder was taken round the ground on a wheel chair. In 1952, five students entered the University, 2 for medicine, 2 for Science and 1 for Arts. On the 6th of September 1952 a gloom was cast on the college, by the passing away of the Founder. The period from 1944 to 1969 was the "GOLDEN ERA" of, Skanda. In 1954, Skanda became a "Super Grade School" with three other Schools in Jaffna. Mr. S. K. Durairajah, famous Physics Teacher, from St. John's College was appointed as a Head of the Science section, creating a special post, Mr. C. Thiyagaarajah as Head of the Arts Section Indian Teachers such as Mr.Rajappan Msc, Mr. Prapakaran, Msc, Mr. Daniel, Mr. Menon, Bsc and others were appointed Science Teachers. Students not only from reputed" Schools in Jaffna but also from other parts of the- country flocked to Skanda. The Examination results were excellent and many students entered various Faculties of the University. The performance in sports was of high standard becoming chansons in the first eleven soccer game, twice at the JSSA competition, In addition to excellence In cricket and athletics.

When "Orator" Subramaniam retired in 1962, Mr. V Sivasubramanivarn was appointed as Principal and Mr.K. Sivakumaran as Vice Principal. It was the first time an Old Boy was appointed as a Principal. The period between 1962 to 1969 was the "period of consolidation" with excellent performance at University Entrance Examination in 1963. 43..

students entered the University for Various Faculties, which was the highest in Jaffna and third highest on an Island basis. During this time the student population swelled to more than 2000. After 4S years of association with Skanda "wiser" Subramanian retired and Mr. K. Sivakumaran was acting until Mr. P. Aharnptararn took over as Principal. The Colombo OSA organiaed a farewell function with dinner in Ceylinco Hotel under the patronage of Mr. N. S. Kandiah, Guests included Prof. Malalasekara, Mr. Wilmot Perera, A. M. A. Azlz, retired Principal, Zahira College and Mr. V. Thurai Singham Director of Education. Following him Mr. C. Thiyagaraja, Mr. P. Nagar itnam. Mr. S. Rasavallavan, Mr. S. Ponnampallam, M.P. Vigneswaran, and Mr. A. Kamalanathan were Principals.

In 1997, Mr. K.Sivaji assurned duties as Principal Mr. Thirumurugan as Vice Principal. Both of them dedicated themselves honestly and sincerely putting a lot of hard work to bring back Skanda to its old glory. The School was on an upward trend. The Welfare Association, Colombo was able to get permission from North East Education Ministry to commence classes for Juniors from Grade 1 to Grade 5. The Colombo

OSA ; constructed the Murugan Temple, and statues erected for Founder Kandiah Upaathiyaar, Dr. Subramaniyam, Orator Subraminiyam and wiser Sivasubramiyam in the School premises.

With the retirement of Mr. Sivaji in March 1998 Mr. Aru Thirumurugan was appointed as a Principal. By his hard work and devotion he got approval under "Isuru scheme" of three storey building financed by ADB, Ministry of Educations and other donors costing Rs. 60 milion. This building houses Assembly hall, Administrative Block, Computer Lab, and Science Laboratory, In addition a two storied building to house the Home Science Laboratory and Agriculture Laboratory. He population is increasing. Exam results are satisfactory. If this trend the School may achieve its old glory.

Mr. Aru Thirumurugan retired and Mr. Eeswarathsan – old boy, was appointed as Principal.

Being a very good tuition master he had classes in science during Saturday Sunday and Holidays for G.C.E.(O.L) and G.C.E(A/L) Student. He got other teachers also follow same. He was very keen about discipline. There was lot of improvement in education and discipline and punctuality. Unfortunately he fell sick and got a transfer to Colombo. It is then Mr. Selvaskainthan, and old boy became principal he followed footsteps of Mr. Eeswarathasan and there was marked imprudent - a student became 1st in the island in the G.C.E.(A/L) in 2016 and brought credit to the school. The principal was able to persue the O.S.A, UK to donate a bus to the school, which has become a eality. Infact, the principal asked me to request the Hon. Governor, N.P. for a bus and the Governor agreed to my request.

To complete the story, a word about the Stamp Release Committee seems appropriate. This adhoc team of senior Skanda Malnthar was formed on 13th September 2011 with a determination to stage a once In-a century honor to our Annal Skanda, missed In her 100th year. In unison voice all Skanda Mainthar, here and abroad agreed "If not now; It will never be" special mention must made about the late N. Karunaiananthan who played a major role re the stamp release with the assistant and others.

Special mention must be made about the OSAs abroad for the trust and confidence they had In the committee members, whom they have never met or seen, except the bond of being "Skanda mainthar". It not for the encouragement and unmitigated eagerness shown by them, this historic event would never have seen the dawn of the day. The tough time we had In establishing this togetherness- with a 16 hour world time difference - (Australia to Canada) It is an unforgettable life –time experience, but interesting and worth it.

We take this opportunity to thank each and every one who contributed towards the success or this century's event.

**Dr.S.Sivanandarajah**

# சங்கம் சிறக்க நல்வாழ்த்துக்கள்

Dr. தம்பி பரா

# ஸ்கந்தாவில் நினைவில் நின்றவைகள்

ஸ்கந்தாவின் க.பொ.த. உயர்தர கலைப்பிரிவு மாணவனாக 1961-1962ல் பயின்று 1963ல் பேராதனை பல்கலைக்கழகத்திற்கு சென்றேன். புவியியல் சிறப்புப் பட்டதாரியாகி 1971-1974 வரை புவியியல், சமூகக்கல்வி ஆசிரியராகவும் விடுதி மாணவர் மேற்பார்வை ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளேன். இக் காலங்களில் நினைவில் நிற்பவைகளை மீட்டுப் பார்க்க என் மனம் விரும்புகின்றது.

நான் ஸ்கந்தாவில் சேரும்போது க.பொ.த.சாதாரண தரத்தில் வேலணை மத்திய கல்லூரியில் புவியியல் படிக்கவில்லை. எனது வர்த்தகப் பாடங்களுக்கு அங்கு உயர்தர வகுப்பு இருக்கவில்லை. புவியியல் படிக்காததால், இருந்த கலைப் பிரிவிலும் படிக்க முடியவில்லை. எனக்கு ஒரே கவலை. எனது உறவினரான ஆசிரியர் திரு.வி.பொன்னுத்துரை அவர்கள் என்னை ஸ்கந்தாவிற்கு அழைத்து வந்தார். அப்போது ஸ்கந்தாவில் மாணவர் அனுமதிக்கு பொறுப்பாக இருந்த உப அதிபர் திரு. வி.சிவசுப்ரமணியம் அவர்களிடம் அழைத்துச் சென்று நிலைமையை விளக்கினார். அப்போது அவர் எனது சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளைப் பார்த்துவிட்டு, நீர் இந்த ஆவணியில் சாதாரண தரப் பரீட்சையில் புவியியல் பாடத்தை எடுத்து சித்தியடைந்து காட்டுவதுடன் உயர்தரத்தில் புவியியலை ஒரு பாடமாக எடுக்க வேண்டுமெனவும் ஊக்கப்படுத்தி அனுமதி தந்தார். அவரே புவியியல் ஆசிரியராக கற்பித்ததை என்னால் மறக்க முடியாது.

புவியியல் பாடம் எனக்கு ஆரம்பத்தில் புதிதாக இருந்தாலும் அவர் (அவரை வைசர் என்றே அழைப்பர்) வகுப்பிற்கு வரும்போது புத்தகங்கள், குறிப்புகள் எதனையும் கொண்டு வரமாட்டார். சிலவேளைகளில் அற்லஸ் எனப்படும் படப்புத்தகத்தை கொண்டு வருவார். கரும்பலகையை நன்கு பயன்படுத்துவார். அவர் கற்பித்த முறையை நான் நன்கு கவனித்து பசுமரத்து ஆணிபோல் ஊன்றி பதிவு செய்யக் கூடியதாக இருந்தது. இந்தக் கற்பித்தல் முறையை என்னால் மறக்க முடியாது. அவர் புவியியல் F.R.G.S பட்டம் பெற்றவர் என்பது பின்னரே எனக்குத் தெரியவந்தது. அவர் கற்பித்தலில் படப் பயிற்சிகள், சமஉயரக் கோட்டுப் படப்பயிற்சிகள், அற்லஸ் படங்களைக் கொண்டு நாடுகளின் பௌதீகப் புவியியல், பண்பாட்டுப் புவியியல் தன்மைகளை அவர் விளக்கிய முறைகளை நான் இலகுவில் புரிந்து கொண்டேன். பரீட்சையிலோ அல்லது அவர் கேட்கும் விளக்கங்களுக்கோ பதில் எழுதுவதிலோ அல்லது சொல்லுவதிலோ நான் சிறந்து விளங்குகிறேன் என்பதை அவர் புரிந்து கொண்டு, பாராட்டியவற்றை நான் நிறுத்திப் பார்க்கின்றேன்.

எனது உயர்தர வகுப்பு முதலாம் வருட காலத்தில் அதிபராக இருந்தவர் புகழ் பூத்த ஒறேற்றர் சுப்ரமணியம் அவர்கள், எனது உயர்தர வகுப்பு இரண்டாம் வருட காலத்தில் அவர் ஓய்வுபெற வைசரே அதிபர் பொறுப்பை ஏற்றார். அவருக்கு அதிபர் வேலை. வேலைப்பழு, அதே நேரத்தில் உயர்தர வகுப்புகளுக்கு புவியியல் கற்பிக்கவும் வேண்டும். இந்நேரத்தில் என்னை அழைத்து முதலாம் வருட வகுப்பிற்கு தான் கற்பித்த இன்ன பகுதிகளை நீர் போய் சொல்லிக்கொடு என்று என்னைப் பணித்தார். நான் சிறிது

வெட்கப்பட்டேன். பின்னர் மனத்தில் துணிவை வரவழைத்து அவர் கற்பித்ததுபோல் அவரது முறையிலேயே நான் கற்பித்தேன். இந்த உயர்தர முதலாம் வருட வகுப்பு பிரதான மண்டபத்தில் இருந்த பல வகுப்புகளில் ஒன்றாக இருந்தது. நான் மாணவனாக இருந்து படிப்பித்த முறையையும், குரலின் தொனியையும் மண்டபத்திலிருந்த ஏனைய வகுப்பு மாணவர்களும், ஆசிரியர்களும் உற்று நோக்கிய அக் காட்சிகள் இன்றும் எனது மனதில் நீங்கா நினைவாகவே இருக்கின்றன.

இவர் வைசர் போலவே எனது ஏனைய பாட ஆசிரியர்கள் வித்துவான் சி.ஆறுமுகம், பண்டிதர் நடராஜா, விசுவநாதக் குருக்கள் ஆகியோர் தமிழ் கற்பிக்க, திரு.தியாகராசா அவர்கள் (பின்னர் அதிபராக, கல்விப் பணிப்பாளராக இருந்தவர்) வகுப்பு ஆசிரியராக இருந்து அரசியலும், இலங்கை வரலாறும் கற்பித்ததை நினைவு கூருகின்றேன். அப்போது திரு.வி.பொன்னம்பலம் அவர்களும் அரசியல் கற்பித்தார். இவர்கள் கற்பித்ததை நினைத்துப் பார்க்கிறேன்.

நான் தீவகத்தைச் சேர்ந்த சரவணையில் இருந்து வந்ததினால் விடுதி மாணவனாகவே தங்கியிருந்து படித்தேன். அப்போது மின்சாரம் வரவில்லை. இரவுப் படிப்பிற்கு வகுப்பறைகள் பெற்றோல்மாக்ஸ் லைற்றுகள் - அவற்றை கொழுத்தி ஏற்ற இரசாயன ஆய்வுகூட பெருமாளின் சேவை. இதனை நினைக்கிறேன். உயர்தர வகுப்பு ஆகையால் என் போன்றோர் இரவில் நீண்ட நேரம் படிப்பதற்கும், அதிகாலையில் படிப்பதற்கும் ஒவ்வொருவரும் தனித்தனி அரிக்கேன் லாம்புகள் பயன்படுத்துவோம். வகுப்பு அறைகளின் நீள வாங்கில்கள் எங்கள் படுக்கையாகவும் மாறும். இவ்வேளைகளில் அதிபர் ஒறேற்றர் அவர்கள் இரவில் அரிக்கேன் லாம்புடன் வந்து மாணவர்கள் என்ன செய்கிறார்கள் என்று மேற்பார்வை செய்வார். இந் நிகழ்ச்சிகளையும் என்னால் மறந்துவிட முடியாது.

விடுதி பொறுப்பு ஆசிரியராக மாதகல் கந்தசாமி அவர்கள் இருந்தார்கள். (சீன வானொலியில் தமிழ் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக கடமையாற்றியவர்). விடுத்துவான் சி.ஆறுமுகம் அவர்களும் விஞ்ஞான ஆசிரியர் சிவபாதசுந்தரம் அவர்களும் விடுதி ஆசிரியர்களாக இருந்தனர். அப்போது 100 – 200 மாணவர்கள் தங்கியிருந்து படித்தோம். தீவுப்பகுதி, வன்னி, மலைநாடு, உடப்பு, சிலாபம், புத்தளம், திருகோணமலை மாணவர்களும் தங்கியிருந்து படித்தார்கள்.

1962 உயர்தரப் பரீட்சை தேர்வில் நானும், மறைந்த திரு.ஆ.கமலநாதன் (அதிபராக கோட்ட வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றியவர்) திரு.க.கனகரட்ணம் (யாழ் பல்கலைக்கழகத்தில் பதிவாளர் பீடத்தில் மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றியவர்) ஆகிய மூவரும் தெரிவாகினோம். பல்கலைக்கழக நுழைவுக்கு மேலும் பலரைச் சேர்க்க வேண்டும் என்று அரசு தீர்மானித்து பலரைச் சேர்த்துக் கொண்டது. இதனால் எமது வகுப்பிலிருந்து மேலும் 12 பேர் தெரிவாகினர். இங்ஙனம் கலைப் பிரிவில் மட்டுமல்ல விஞ்ஞானப் பிரிவிலும், கணிதப் பிரிவிலும் பல மாணவர்கள் தேர்ச்சி பெற்றதுடன் அந்த வருடம் அதிக மாணவர்களைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிய முதல்

பாடசாலையாகவும் ஸ்கந்தா விளங்கியது. அதற்காக பாடசாலை ஒருநாள் விடுமுறையும் விடப்பட்டது. இன்றும் நான் அதனை நினைவில் நிறுத்திப் பார்க்கிறேன்.

1963-1967 வரை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியியலை சிறப்புப் பாடமாகக் கற்றேன். 1967ல் சிறப்புப் புவியியல் பட்டதாரியாகி வெளியேறினேன். 1968ல் தளையசிங்கம் கம்பனியில் கணக்காளராக வருவதற்கு என படித்துக் கொண்டிருக்க, 1970 ஒக்டோபரில் பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் அரசு வழங்கியது. அப்போது எனக்கு நியமனம் யாழ்ப்பாணம் புனித ஜேம்ஸ் கல்லூரியில் கிடைக்கப் பெற்றது. ஸ்கந்தா என்னை இனங் கண்டு வைசர் அவர்களின் சிபாரிசுடன் ஸ்கந்தாவிற்கு இடம் மாற்றம் பெற்று பதவியேற்றது. இன்றும் எனக்கு மறக்க முடியாதுள்ளது. அப்போது அதிபராக இருந்தவர் திரு.ஏகாம்பரநாதன் அவர்கள். நான் புவியியல் கற்ற பாடசாலையில் புவியியல் ஆசிரியாக அதுவும் உயர்தர வகுப்பிற்கு என்னை இணைத்துக் கொண்டதை என்றும் நினைவில் நினைத்துக் கொள்வதை மறந்துவிட முடியாது.

நாலரை ஆண்டுகள் ஸ்கந்தாவில் புவியியல் ஆசிரியராக, உயர்வகுப்பு ஆசிரியராக இருந்து ஒவ்வொரு வருடமும் மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றதையும், நான் கற்றதையும், கற்பித்ததையும் மறக்க முடியாது. நான் புதிய ஆசிரியராக இணைத்துக் கொண்டபோது நான் படிக்கும்போது இருந்த பல ஆசிரியர்கள் இருந்தார்கள். அவர்கள் எனக்குத் தந்த ஆதரவையும், ஊக்கத்தையும் மறந்துவிட முடியாது.

நான் நினைவில் கொள்ள வேண்டியது ஸ்கந்தாவின் விடுதி. நான் படிக்கும்போது ஒரு மண்டபத்தில் இயங்கிய விடுதி, ஆசிரியராக இருந்தபோது 3 மண்டபங்களில் இயங்கும் அளவிற்கு மாணவர்கள் தொகை அதிகரிக்கலாம். விளையாட்டு மைதானத்திற்கு வடக்காக இருந்த தொழிற்கூடமும் விடுதியாக மாற்றப்பட்டது. 300 மாணவர்கள் வரை விடுதியில் தங்கிப் படித்தனர். நாட்டின் பல பாகங்களிலிருந்து மாணவர்கள் வருகை தந்தனர்.

விடுதிப் பொறுப்பாசிரியராக பழைய மாணவராகிய திரு.நா.தவச்செல்வம் அவர்கள் கடமையாற்றினார். அதிபர் அவர்கள் என்னையும் விடுதியில் தங்கி மாணவர் கல்வி, ஒழுக்கம், உணவு மற்றும் வசதிகள் போன்றவற்றை மேற்பார்வை செய்வதுடன் விடுதி ஆசிரியராகவும் நியமித்தார். இங்ஙனம் நியமனம் பெற்று, அங்கு தங்கி சேவை செய்ததை மறந்துவிட முடியாது.

ஸ்கந்தாவின் புகழ் இலங்கை எங்கும் பரவியிருந்தது. எனவே நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பல மாணவர்கள் வந்து சேர்ந்தனர். தீவகத்திலிருந்து மாணவர்கள் சேருவதற்கு வந்தால் அதிபர் எனது ஆலோசனையைக் கேட்பார். நீர் சொன்னால் நான் சேர்க்கின்றேன் என்பார். இதனால் விடுதியில் தீவு மாணவர் தொகை அதிகமான இருந்தது. இதற்கு வித்துவான் சி.ஆறுமுகம் அவர்களின் சேவையும் அளப்பரியது. பாடசாலை விளையாட்டு மைதானத்தில் உதைபந்தாட்டம், துடுப்பாட்டம் என போட்டிகள் நடைபெறும்போது விடுதி மாணவர்களின் பங்களிப்பு அளப்பரியது. பல விளையாட்டு

வீர மாணவர்கள் விடுதியில் தங்கிப் படித்தனர். விளையாட்டுப் போட்டிகளின்போது மதிய உணவு வழங்குவது விடுதியாகவே இருக்கும். அதற்கான விசேட ஏற்பாடுகள் செய்யப்படும். பாடசாலை நீர் விநியோகம், பாடசாலை விவசாயத் தோட்டம் என்பவற்றைப் பராமரிப்பதும் விடுதியின் பொறுப்பாகவே இருந்தது.

கல்லூரி ஆசிரியர் குழாமில் பலர் மதிய உணவை விடுதியிலேயே எடுத்துக் கொள்வர். இங்ஙனம் கல்லூரியின் எழுச்சிக்கு விடுதியின் பங்களிப்பு மிகப் பெரியது. இவ்விடுதிக்கு பிரதான சமையல்காரராக இருந்த திரு.சின்னத்தம்பி அவர்களை மறந்து விட முடியாது. அவரது கந்தரோடை கீரைப் பால் கறியும், முருங்கைக்காய் குழம்பும் மிகப் பிரமாதம். அவருடன் மலையகத்தைச் சேர்ந்த பெரியசாமி என்பவரும் சிறப்பாக கடமையாற்றியவர். இத்தகைய விடுதிக்கு ஆசிரியராக இருந்து செயற்பட்டதை நினைவில் கொள்ளுகின்றேன்.

1975 ஜனவரியில் வரணி மகா வித்தியாலயத்தில் உயர்தர வகுப்புகள் தொடங்க, அதன் அதிபராக இருந்து கல்வி அதிகாரியாக யாழ்ப்பாணத்திற்கு நியமனம் பெற்ற திரு.சிவப்பிரகாசம் அவர்களின் விடாப்பிடியினால் மார்ச்சில் இடமாற்றம் பெற்று செல்ல வேண்டியதாயிற்று. மூன்று மாதங்கள் மாற்றத்தைத் தடுக்க கல்லூரியால் எடுக்கப்பட்ட முயற்சிகளை எண்ணிப் பார்க்கின்றேன்.

நான் மாற்றலாகிச் சென்ற பின்னரும், அதே நடையில் பாடசாலையும், விடுதியும் புகழ் பூத்ததாகவே இருந்தன. நாட்டில் ஏற்பட்ட போராட்ட யுத்தம் காரணங்களினால் மக்கள் இடப்பெயர்வுகள் பாடசாலைகளையும், பாடசாலை விடுதிகளையும் பாதித்து விட்டன. இவை மீண்டும் கட்டியெழுப்பப்படுகின்றன. மனம் ஆறுதலடைகின்றது.

க.பொ.த.சாதாரண தரத்தில் புவியியல் பாடத்தைப் படிக்காத என்னை, புவியியல் மாணவனாக்கி புவியியல் கற்றுத் தந்து, புவியியல் சிறப்புப் பட்டதாரியாக்கி, க.பொ.த. உயர்தரத்தில் புவியியல் ஆசிரியராக என்னை நியமித்தது ஸ்கந்தா. அதேபோல் விடுதியிலிருந்து படித்த என்னை விடுதி ஆசிரியராக்கியது ஸ்கந்தா. இத்தகைய ஸ்கந்தாவின் வரலாற்றில் ஒரு புவியியல் ஆசிரியராக, விடுதி ஆசிரியராக செய்த சேவையை நினைத்துப் பார்க்கின்றேன். இதற்கு வித்திட்ட வைசர் அவர்களை நினைவில் கொள்கின்றேன்.

நன்றி

**கு.கணேசலிங்கம்**
ஓய்வு நிலை அதிபர்
வேலணை மத்திய கல்லூரி

# எம்மைச் செதுக்கியவர்கள்

இன்று எனது கல்லூரி அகவை 125 கடந்தாலும் எனது கல்லூரி காலத்தை குறிப்பிட்டால் 1963 - 1973 வரையிலான காலமாகும். எனது கல்லூரி ஸ்கந்தாவை நினைக்கும் போதெல்லாம் அணை கடந்த வெள்ளம் போல் - அந்த நுழைவாயில், கம்பி வாயில் கதவில் ஏறி சுழன்று வருவது, நெல்லி மரம், அதிபர் காரியாலயம், கிளாக்கர் அம்மா, கோழிக்கூடு, என்று எண்ணங்கள் தொடர் அலைகளாக ஓடி வரும். அந்த கணங்கள் மனத்திற்கு ஒரு ரம்மியத்தை தரும். மனம் பூரிப்படைவது இலகுவாக உணர முடியும். இது எதனால? கண்டிப்பு கட்டுப்பாடு நிரம்பிய கல்லூரி அது. தப்ப ஏலாது. தவற ஏலாது. தண்டனை காத்திருக்கும் என்பதும் மறுப்பதற்கில்லை. பல விடயங்களில் ஒற்றர்கள் கூட செயற்படுவார்கள். இருந்தாலும் கூட அந்தப் பெயருக்குரிய புல்லரிப்பு ஏற்பட காரணம் எதுவென்றால் பயத்தோடு பயின்றோம். ஆசான்கள் உளமாற நேசத்தோடு போதித்தார்கள். தண்டனைகளில் கூட தர்மம் பார்க்கலாம். தவறு எனில் மன்னிப்பு மூலம் சரிப்படுத்த யாரும் பொதுவாக தயங்கியது கிடையாது. சுருங்கக் கூறின் வளப்படுத்தப்பட்டோம். உரம் இடப்பட்டோம் நீர் பாய்ச்சி செழிப்பாக வளர்க்கப்பட்டோம். அது தான் இன்றும் உள்ள இந்த அன்பு, பாசம், ஒரு பிணைப்பு எவ்வளவு தான் உயர்ந்தாலும் கால் முளைத்தும் சிறகு வைத்துப் பறந்தாலும் கல்லூரியை கண்டு கொள்ளாமல் போக முடிவதில்லை. எங்கள் கல்லூரி மண் சொந்த மண் என்ற எண்ணமே இருக்கிறது. ஆசான்கள் எங்களுக்குரிய சொத்து என்ற உரிமை, தைரியம், இருந்தது. களி மண்ணில் கலை வடிக்க காரணமாக இருந்தார்கள். பாராட்டத் தெரிந்தவர்கள்.

ஒரு முறை 8ம் வகுப்பு என்று நினைக்கிறேன். எங்கள் தமிழ் ஆசிரியர் திரு. கல்யாண சுந்தரேசன் அவர்கள் கட்டுரை வரையும் படி பணித்திருந்தார். தலைப்பு "நான் விரும்பும் பெரியார்" எனக்கு நேருவை நன்கு பிடிக்கும். அவரது சரிதம் படித்து எழுதினேன். இறுதியில் "நேரு உடையில் எப்பொழுதும் அணிவது ரோஜா. அவர் எங்களுக்கு ராஜா" என எழுதி முடித்திருந்தேன். அப்பப்பா அந்த வார்த்தைக்கு அவரின் பாராட்டுதல்கள் இன்னும் ஞாபகத்தில் இருக்கிறது. பாடங்களில் பரிசளிப்பு விழாவில் நான் முதன்மை பரிசு பெற்றதில்லை. ஆனால் ஒவ்வொரு வருடமும் தமிழ் கட்டுரை போட்டியில் 1ம் இடம் எடுக்கத் தவறியதில்லை. இல்ல விளையாட்டு போட்டிகளின் போது ஆசிரியர்களது செயல்பாடுகள் உயிரை கொடுப்பது போலிருக்கும். இப்படி பார்த்து பார்த்து வளர்ந்தமை இன்று ஒவ்வொரு செயற்பாட்டிலும் பிரதிபலிக்கத்தான் செய்கிறது. அங்கு உணமை இருக்கும்: உறுதி இருக்கும்: போராட்டம் இருக்கும்: பொறாமை இருந்ததில்லை, ஆனால் அடுத்த தடவை முயற்சி மிகப் பலமானதாக இருக்கும். அந்த காலத்தில் மாணவ தலைவர்களாக வருவது என்றால் மிக மிக பெருமைக்குரிய விடயம். ஆசிரியர் பலர் சேர்ந்து அவர்கள் மட்டும் முடிவு செய்து மாணவ தலைவர்களை முடிவு செய்வார்கள். தரம் 10ல் இருந்து மாணவ தலைவர்களில் ஒருவராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டமை மறக்க முடியாத நிகழ்வு என் ஆளுமை வளர்ப்புக்கு மிக மிக உறுதுணையாக இருக்கக் கூடிய நிகழ்வு அதுவாகும்.

வாழும் காலங்களில் கடந்து வந்த பாதையில், எத்தனை போராட்டங்கள், இழப்புகள், சோதனைகள் எதிலும் மூழ்கிப் போகாமல் வாழக் கற்றுக் கொடுத்த கல்லூரி எனது ஸ்கந்தா.

இன்று கல்லூரியின் வளங்களை உயர்த்த முடிகிறதோ இல்லையோ  கல்லூரி அன்னையை மனதார உரிமையுடன் போற்றுதலுடன் கூடிய நினைவுகளுடன் வாழ முடிகிறது. எங்கள் ஆசான்கள் அந்த அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியப் பெருந்தகைகள் வழிகாட்டியாக வாழ்ந்து காட்டியவர்கள். ஆசிரியத் தொழிலுக்கு ஏற்ப கடமையுணர்வுடன் தெய்வீகத் தொண்டு புரிந்தவர்கள் மறக்கவே முடியாத நினைவுகள். முற்று முழுதாக இரு கண்களும் பார்வை புலன் இழந்த திரு துரைராஜா ஆசிரியர் அவர்களின் வீறு கொண்ட நடை மட்டுமே போதும் ஒரு மாணவனது தன்னம்பிக்கையை வளர்க்க. நாவில் தேனூற வைக்கும் நினைவுகள் அவை.

தற்போது நானும் ஓய்வு பெற்ற ஆசிரியை தான். பல்வேறு கல்லூரிகளில் கற்பித்த காலங்களை எண்ணிப் பார்க்கிறேன். இன்றைய மாணவச் செல்வங்களின் மனநிலையை ஆசிரியர்களின் அர்ப்பணிப்புகளை ஒத்து நோக்கிப் பார்க்கிறேன். "கொடுத்து வைத்தவர்கள் நாங்கள் தான்." என கோஷமிட்டுக் கூறுவேன். நாங்கள் கொடுத்து வைத்தவர்கள் தான். எங்கள் ஆசான்களின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்க வேண்டிய தேவையே இல்லை. நன்றியுடன் நினைவு கூர்வது மட்டும் போதும். அதே சமயம் இன்று எமது ஸ்கந்தாவின் வளர்ச்சி பார்ப்பதற்கு மன நிறைவை தருகிறது. இது கூட எங்கள் ஆசான்களின் வாழ்த்துக்களாக தான் இருக்கும்.

நன்றியுடன்
**திருமதி செல்வராணி யோகராஜா.**


*With Best Compliments from*

# Quick Enterprises

Auctioneers & Brokers

**Real Estate Consultants, Property Management, House & Property Buying & Selling, Renting & Leashing Houses, Office Space, Showrooms etc.**

No. 26 3/2, Peterson Lane, Wellawatta, Colombo - 06, Sri Lanka.
Tel : 2367436, 2367437 | Mobile : 071 4103461
Email : mbala1939@gmail.com

# நினைவு கூருகிறோம்.....

ஸ்கந்தா அன்னைக்கு
பணியாற்றி தற்போது அமரர்களான
முன்னாள் அதிபர்கள் ஆசிரியர்கள்
பழைய மாணவர்களின்
ஆத்மா சாந்தி அடைய வேண்டி
பிரார்த்திக்கின்றோம்!

அதேவேளை அவர் தம்
குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை
நன்றியுணர்வுடன்
தெரிவித்துக் கொள்கிறோம்.

**யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்**
**கொழும்பு.**

*With Best Compliments from*

# Online Call Centre

479/1, GALLE ROAD, COLOMBO 06 TP: 011 2361199,2362232,Fax : 011 236 1819
E-MAIL- onlinecallcentre@yahoo.com,ymail99@ymail.com
479,1, காலி வீதி, கொழும்பு 06.

WESTERN UNION WU
moving money for better

COMMUNICATION SERVICES
LOCAL, I.D.D CALLS,
NET 2 PHONE
PHOTOCOPY
LAMINATING
SCANNING
PRINTING
FAX
PRE-PAID CARDS
VAN FOR HIRE




வேகமாகவும்
இலகுவாகவும்
பாதுகாப்பாகவும்

WESTERN UNION மூலமாக வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பணத்தை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

*our aim your satisfaction*

*With Best Compliments from*

# WELLAWATTE GAS CENTRE

No. 36, Hampden lane, Colombo6
Tel : 0112367373

# யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
# பழைய மாணவர் சங்கம் கொழும்பு

## வரலாறும் வளர்ச்சியும்

### எமது கல்லூரியின் மகுட வாக்கியம் "உண்மையே உயர் அறம்"

1894 ஆம் ஆண்டு உயர்திரு கந்தையா உபாத்தியாரின் சிந்தையில் உதித்து தோற்றம் பெற்று இன்று புகழ்பூத்த கல்லூரியாக 125 வருடங்களைக் கடந்த எமது கல்லூரியின் பழைய மாணவர்களால் உருவாக்கப்பட்டதே எமது கொழும்பு பழைய மாணவர் சங்கம். நாட்டின் உள்ளும், புறமும் புகழ் பரப்பிவரும் நல்மாணாக்கர்கள் இக் கல்லூரியின் வித்துக்கள் தாம் கற்ற கல்லூரியின் பாசத்தாலும் நேச உணர்வுகளாலும் கல்லூரியை வளர்ப்பதற்கு இச்சங்கங்கள் பேருதவி புரிவது என்பது பேருண்மையாகும்

இந்த வகையில் 1947 ம் ஆண்டு கொழும்பில் தமது பட்டப்படிப்பை மேற் கொண்டிருந்த திரு. V. சிவசுப்பிரமணியம், ஆசிரிய பயிற்சியை மேற் கொண்டு இருந்த திரு.K .சிவகுமாரன் ஆகியோருடன் திரு.S .S நடராசா, திரு .S .S .கனகலிங்கம் சகோதரர்கள் ஒன்று கூடி எடுத்த முயற்சியால் இது சாத்தியம் ஆனது. ஆயினும் நீண்ட காலமிது தொழிற் படவில்லை காலத்தின் கோலத்தால் தடைப்பட்ட இச்சங்கம், 1969ல் மீண்டும் ஸ்கந்தாவின் மைந்தர்கள் ஆன திரு.N .S கந்தையா, திரு.S.குமாரகுலசிங்கம், திரு.K.பூதத்தம்பி , திரு.N. குருசாமி, Dr.S. சிவானந்தராஜா, திரு.S.Sநடராசா ஆகியோரின் முயற்சியால் மீண்டும் உயிரூட்டப்பட்டது. இவர்களால் கல்லூரியின் 75ம் ஆண்டு நிறைவு கொழும்பு சிலிங்கோ ஹோட்டலில் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவ்விழாவுக்கு திரு.G .M மலலசேகர, திரு. வில்மட் பெரேரா, திரு.A .M அசீஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர் அத்துடன் முன்னைநாள் ஸ்கந்தா அதிபர் திரு.V .சிவசுப்பிரமணியம் அவர்களின் பிரியாவிடையும் நிகழ்த்தப்பட்டது. தொடர்ந்து 5 ஆண்டுகளின் பின் சங்கம் ஏனோ செயலிழந்து விட்டது. தொடர் காலங்களில் ஏற்பட்ட தொய்வு, வளர்ச்சி தடைப்பாடு, இடையூறுகள் கல்லூரியை பெரிதும் பின்னடைவுக்குடப்பட்ட நிலைமையை உருவாக்கிய போது கல்லூரியின் புத்தாக்கத்திற்காக மீண்டும் பழைய மாணவர் சங்கத்தை நிறுவினால் தான் ஏதாவது கல்லூரிக்கு பலன் ஆற்ற முடியும் என்று 1992ல் மீண்டும் யாப்பு வரையும் குழு உருவானது.

1993 பெப்பிரவரி 26ம் திகதி கூட்டப்பட்ட பொதுக்கூட்டத்தில் யாப்பு சீர் செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. இங்கு தான் முதலாம்ம் செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. Dr.A.சக்திவேல் (தலைவர்) திரு.T .ஆனந்தபாஸ்கரன் (செயலாளர்) திரு.ராவீந்திர்வாமன் (பொருளாளர்) திரு.S.பத்மநாதன் (உபதலைவர்) திரு.B.சிறிரட்ணம் (உபதலைவர்) Dr .P .கந்தசாமி (உபசெயலாளர்) செயற்குழு உறுப்பினர்களாக

திரு.K .P .அரவிந்தன், திரு.ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன், திரு.S .மகேந்திரன், Dr.(திருமதி) S.தனபாலசிங்கம், திருமதி .S . விஷ்ணுகாந்தன் ஆகியோருடன் பத்திரிக்கை ஆசிரியராக திரு.K . சச்சிதானந்தனும் தெரிவானார்கள். தொடரும் காலங்களில் இக்குழுவால் கல்லூரிக்கு வருடாவரும் பல்வேறு காரியங்கள் ஓரளவு நிறைவேற்றப்பட்டு வந்துள்ளது குறிப்பிடலாம். அந்த வகையில் 1994 மார்ச் 20ல் முன்னாள் அதிபர் ஒரேற்றர் சுப்பிரமணியம் அவர்களது 31ம் நாள் நினைவஞ்சலி கூட்டம், மறைந்த முன்னாள் புகழ் பூத்த ஆசான் திரு.V.பொன்னம்பலம் நினைவஞ்சலி கூட்டம் ஆகியவற்றை நடத்தி கௌரவித்தமையை குறிப்பிடலாம்.

1994ஆம் கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் கல்லூரியின் நூற்றாண்டு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. பிரதம விருந்தினராக காலஞ்சென்ற முன்னாள் சபாநாயகர் திரு.K .P.ரத்னாநாயக்க கலந்து சிறப்பித்தார்.

இதே காலத்தில் ஒறேற்றர் ஞாபகார்த்த நிதியம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு நூற்றாண்டு சிறப்பிதழ் வெளியிடப்பட்டது.

1995ல் மேலைத்தேய வாத்தியக் குழுவினருக்கு இச்சங்கமே சீருடை வழங்கியது. 1996 ல் குடிநீர் தேவைகளுக்காக நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கி காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்தமையை அன்றிருந்த நிலையை ஒப்பிடுகையில் நல்ல செயலாக குறிப்பிடலாம். எமது கல்லூரி ஸ்தாபகர் உயர்திரு .கந்தையா உபாத்தியாரின் உருவச்சிலையை கல்லூரி வளாகத்தில் 1993 ஆனி 17 ல் எமது பழைய மாணவர்கள் நிறுவி பெருமிதம் கொண்டனர்.

கல்லூரியின் அன்றைய அதிபர் திரு.K.சிவாஜி அவர்கள் அதற்கான அடிக்கல்லை நாட்ட, ஸ்தாபகரின் குடும்ப உறுப்பினரும், அன்றைய பாராளுமன்ற உறுப்பினர் திரு. தர்மலிங்கம் அவர்களின் மனைவி திருமதி சரஸ்வதி தர்மலிங்கத்தினால் திறந்து வைக்கப்பட்டது.

2002 டிசம்பர் 07ல் முன்னைநாள் புகழ் பூத்த அதிபர் ஒறேற்றர் அவர்களது 100 ஆவது பிறந்தநாள் விழா கொ/ தமிழச் சங்க மண்டபத்தில் கோலாகலமாக நடாத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

2006 நவம்பர் 24ல் முன்னைநாள் அதிபர் திரு. C. தியாகராஜா அவர்களது ஆத்மசாந்தி நிகழ்வை நிகழ்த்தி மனநிறைவு கண்டது.

கல்லூரியின் தற்போதைய நிகழ்வாயில் அலங்கார வளைவு எமது சங்கத்தின் செயற்பாடாக 2007 யூலை 15 அன்று அன்றைய சங்கத்தலைவர் அமரர். Dr.மு.கதிர்காமநாதன் அவர்களால் அமைக்கப்பட்டது பெருமையான விடயமாகும்.

25 ஐப்பசி 2007ல் கொழும்பு பழைய மாணவர் சங்கம் 15வது ஆண்டு நிறைவை கொண்டாடியிருந்தது. கலாநிதி. மு. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்ற

அவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக உடுவை S. தில்லை நடராஜா கலந்து சிறப்பித்தார். மலராசிரியரான திரு.வ.த. மனோகரன் நல்ல முறையில் மலரை வடிவமைத்திருந்தார். மலரில் ரூபா. 800,000 செலவில் கல்லூரி வளாகத்தில் ஒரு முருகன் கோவில் அமைத்தமை, ஸ்தாபகர் திரு. கந்தையா உபாத்தியாயர் அவர்களுக்கு உருவச்சிலை அமைத்தமை, ஒறேற்றர் பெயரால் புலமைப்பரிசு நிதியம் அமைத்தமை பெரும்பாலானோரினால் பாராட்டப்பட்டது.

ஸ்கந்தா மைந்தர்களின் சங்கமம் 2008 கொண்டாடப்பட்டு மலரும் வெளியிடப்பட்டது. அதில் சேகரிக்கப்பட்ட நிதியிலிருந்து "ஸ்கந்தா ஆரம்பப் பாடசாலை நிதியம்" உருவாக்கப்பட்டதை குறிப்பிடலாம்.

அத்துடன் ஆரம்பப் பாடசாலைக்குரிய மின் இணைப்பு செய்து கொடுத்தமையும் குடிநீர் வசதிக்காக நீர்த்தாங்கி அமைத்தமையும் குறிப்பிடலாம். தொடர்ந்து வரும் காலங்களிலிருந்து இன்றுவரை கல்லூரியின் விருத்திக்காக கொழும்பு பழைய மாணவர் சங்கம் ஆற்றிய பணிகள் பல பல. கல்லூரி தொடர்ந்து 5 வருட காலமாக தமிழ்த்தின நாடகப்போட்டியில் (அகில இலங்கை) தேசிய மட்டத்தில் முதலாம் இடம் பெற்றமை சிறப்பு அம்சமாகும். அவர்களது இறுதிப்போட்டி தலைநகரில் இடம்பெற்ற காலமெல்லாம் அவர்களுக்கு உணவு, தங்குமிடவசதி, செய்ததோடு அந்நாடகங்களை கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் மேடையேற்றி அவர்களை உற்சாகப்படுத்தி நினைவுப்பரிசுகளும் நினைவு T.Shirt களும் வழங்கி அவர்களை கௌரவப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து 04 வருடங்களாக ஒவ்வொரு வருடமும் கல்லூரியில் இலவச வைத்திய சோதனையை எமது பழைய மாணவர்களான வைத்தியர்களாலும் யாழ் மருத்துவர்களாலும் நடாத்தி இலவச மருந்துகளும் வழங்கி வந்துள்ளது.

எமது கல்லூரியின் ஆசிரியப் பெருந்தகைகளான திரு. துரைராஜா சேர். திரு. மணியம் சேர் ஆகியவர்கள் அமரர்களான போது அஞ்சலிக்கூட்டங்கள் நடத்தி நன்றியறிதலை புரிந்துள்ளது.

எங்கள் பழைய அதிபர் திரு.சிவசுப்பிரமணியம் (வைசர்) அவர்களது 100 வது பிறந்தநாளை நினைவுகூர்ந்து விழாவும் எடுத்தது. கடந்த ஆண்டு கல்லூரி முருகன் கோவிலின் கும்பாபிஷேகத்தை நடத்தி நிறைவு கண்டது. விளையாட்டுத்துறையில் கல்லூரி மேம்பட எண்ணங்கொண்டு பந்துகள், கிரிக்கட் மட்டைகள், T - shirts, பாதணிகள் துழங்கியுள்ளது. க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கு இலவச கருத்தரங்கு ஒழுங்கு, கணனி அறை மின்னிணைப்பு செய்வதற்கான நிதி உதவி, ஆங்கில ஆசிரியர்கள் போதாமையைக் கருத்திற் கொண்டு வெளிவாரி ஆங்கில ஆசிரியர்களை நியமித்து அவர்களுக்கான வேதனம் வழங்கியமை சிறப்பான விடயங்களாகும்.

5ம் தர புலமைப்பரிசில் வகுப்புக்களின் மேலதிக பயிற்சிக்குரிய வேதனம் வழங்கியமை குறிப்பிடத்தக்க செயற்பாடாகும். இதை விட எமது சங்க உறுப்பினரான திரு.S.மகேந்திரன் தனது தனிப்பட்ட செயற்பாடாக கல்லூரியின் ஒன்றுகூடல் மண்டபத்திற்கு ஒரு தொகை கதிரைகள் வழங்கி இருந்தார்.

இதைவிட காலத்துக்கு காலம் மாகாணமட்ட வெற்றியாளர்கள் இரசாயனவியல் ஒலிம்பியாட் போட்டி தேசிய மட்ட தடைகள போட்டி போன்ற நிகழ்வுக்காக கொழும்பு வந்தபோது, அவர்களுக்குரிய தங்குமிட, உணவு வசதி இச்சங்கத்தினால் செய்து கொடுக்கப்பட்டது.

இதைவிட முக்கியமாக கடந்த ஆண்டு (2017) கா.பொ.த உயர்தரப் பரீட்சையில் 1ம், 3ம் இடம் பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு விழா எடுத்ததோடு அவர்களுக்கு தங்கபதக்கங்கள் வழங்கி கௌரவித்ததோடு அவர்கள் தம் ஆசிரியர்கள், அதிபர் ஆகியோரையும் கௌரவித்தும் மகிழ்ந்தது.

எமது ஸ்கந்தா ஆரம்பிக்கல்விப்பிரிவுக்கு கணனி கற்கை நெறிக்காக எமது சங்க உறுப்பினர் திரு.S.மகேந்திரன் புதிய கணனி ஒன்றை அன்பளிப்பு செய்திருந்தார்.


எமது கல்லூரியின், ஆரம்ப ப்பாடசாலை தனித்து இயங்க வேண்டிய காலகட்டம் ஏற்பட்ட போது அதற்குரிய காணி தேவைப்பட்ட போது, எங்கள் பழையமாணவர் சங்கம் கொழும்பும், ஒரு குறிப்பிட்ட பரப்பளவு காணி வாங்க உதவி புரிந்தமையும் குறிப்பிடலாம். கல்லூரி வளர்ச்சிக்காக இன்று வரை எமது சங்கம் தம்மாலான வகையில் பரிசளிப்பு விழா, விளையாட்டுப்போட்டி நடைபெறும் காலங்களில் தமது பங்களிப்பையும் செய்து வருகின்றது. மாதம் ஒருமுறை ஒன்றுகூடி கல்லூரி தேவைக்கான விண்ணப்பங்கட்கும், விழாக்களில் பங்கு கொள்வதிலும் அக்கறையாக செயல்பட்டு வருகிறது.

எமது பழைய மாணவர் சங்கத்து உறுப்பினர்கள், பல இன்று எம்மிடத்தில் இல்லை. அவர்களது சேவையை மனதார இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூறுகின்றோம். கல்லூரியில் உள்ள பற்று காரணமாக இச்சங்கம் கல்லூரித் தேவைகள் சிலவற்றை தானும் நிறைவு செய்து வருகின்றது குறிப்பிடக் கூடியது. இறுதியாக காலம் காலமாக கல்லூரி அதிபர்களது ஒத்துழைப்பும் நட்பும் இருப்பதால் எமது கல்லூரிக்காக செய்யும் செயற்பாடுகள் பலனளித்து வருகின்றமையும் பாராட்டுதலுக்குரியது.

மேலும் 2012ல் கல்லூரியின் அகவை 117 ஆக இறந்தகாலம் முன்னைநாள் தலைவர் திரு.கருணைஆனந்தன் தனது செல்வாக்கு பெருமுயற்சியால் "ஸ்கந்தவரோதையக் கல்லூரி விசேட ஞாபகார்த்த முத்திரையும் 08.01.2002 என சீல் குற்றிய உறையும் மனிதவள மேம்பாட்டு சிரேஷ்ட அமைச்சர் திரு.D .U குணசேகரவால் வெளியீடு செய்து கல்லூரிக்கு கௌரவம் தேடித் தந்தமை மிகச் சிறப்பான அம்சமாகும்.

இனிவரும் காலங்களிலும் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் மேலும் மேலும் துடிதுடிப்புடனும் உத்வேகத்துடனும் இயங்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் .

**திருமதி.செல்வராணி யோகராஜா**
உபதலைவர் பழைய மாணவர் சங்கம் கொழும்பு



# எமது மனமார்ந்த நன்றிக்குரியவர்கள்

- விழாவுக்கு பிரதமவிருந்தினராக வந்து வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்த ஸ்கந்தவரோதயன் திரு. சு. பத்மநாதன் அவர்கள்
- விசேட விருந்தினராக வருகை தந்து சிறப்பித்தவர்கள்
- ஆசிச்செய்தி அனுப்பிய ஸ்கந்தன் ஆலயக் குருக்கள் அவர்கள்
- எமது கல்லூரியின் அதிபர்கள், உப அதிபர்கள், முன்னாள் அதிபர், ஆசிரியர்கள்.
- எமது வெளிநாட்டு பழைய மாணவர், மாணவர் சங்கங்கள்
- மலருக்கு செய்திகள் ஆக்கங்கள் வழங்கியவர்கள்
- எமது சங்க உறுப்பினர்கள்
- விளம்பரங்களை தந்துதவிய வர்த்தக வள்ளல்கள்
- இம்மலரை சிறப்பாக அச்சிட்டுத் தந்த யுனி ஆர்ட்ஸ் அச்சகத்தினர்
- எமது சங்க முன்னாள் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், அங்கத்தவர்கள் ஆகியோர்
- இரவு போசனம் வழங்கிய "மகேன்ஸ்" ஸ்தாபனத்தினர்
- இறுதியாக இவ்விழாவில் பங்கேற்ற சகோதர பாடசாலைப் பிரதிநிதிகள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள்

அனைவருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகள்

இறுதியாக விழா சிறப்புற இறையருள் கூடியமைக்கு எல்லாம் வல்ல ஸ்கந்தப் பெருமானுக்கு எமது சிரம்தாழ்த்திய நன்றிகள்

**நிர்வாகக்குழு**

# ஸ்கந்தா ஆரம்ப பாடசாலைக் கீதம்

I

"ஸ்கந்தா" ஆரம்ப பாடசாலை அன்னை
இலங்கிட என்றுமே போற்றிடுவோம்.

இங்கித ஆயகலைகள் அனைத்தையும்
உவந்திடும் அன்னையை வணங்கிடுவோம்.

II

சீரிய செந்தமிழ், சைவமோ, டாங்கிலம்,
செப்பிடும் எண்ணும் எழுத்தும் கொண்டு
நேரிய விஞ்ஞான, கணித, முகாமை
நித்தியம் வென்றிட வந்தனை செய்வோம்.

III

ஸ்கந்தனை போற்றிய கந்தைய வள்ளலின்
சிந்தையில் விளங்கும் ஆலயமே.
முந்தையோர் மகிழ்ந்த முதுசொம் அனைத்தையும்
விந்தையோடதனை போற்றி வணங்குவோம்.

இயற்றியவர் :
இசை ஆசிரியர் : **திரு. K.S. சிவஞானராஜா**

# கல்லூரிக் கீதம்

1. போற்றிசெய் வோம் எங்கள் கல்லூரித் தாயைப்
பொலிவுடன் மாணவர் கூடி (போற்றி)

2. ஸ்கந்தா வரோதய எங்கள் கல்லூரி
சந்தத மும்புகழ் கொண்டே
இந்த வுலகினில் நன்கு வளர்ந்திட
ஸ்கந்த அருள்புரி நன்றே (போற்றி)

3. ஆங்கில ஞானமும் அருந்தமிழ் ஆரியம்
அவைதரு ஞானமும் நன்றே
ஓங்குவிஞ் ஞானமும் உயர்தரு கலைகளும்
உண்மையில் வளர்தரும் இங்கே. (போற்றி)

4. பிறவிகள் தோறுமே தொடருநற் கல்விப்
பேற்றினை ஈந்தனை அன்னாய்!
உறவென்றும் நீயே உண்மையோ டுனக்கா(க)
உழைத்திடு வோமென்றும் நாமே. (போற்றி)

5. எந்தை யெனத்தகு கந்தையா வள்ளலின்
சிந்தையி லெழுந்தகல் லூரி
செந்தண்மை மருத்துவன் சுப்பிர மணியனின்
சேவையில் உயர்ந்தகல் லூரி
சேவையில் உயர்ந்தகல் லூரி
சேவையில் உயர்ந்தகல் லூரி
சேவையில் உயர்ந்தகல் லூரி (போற்றி)

6. வாழிய வாழிய எங்கள்கல் லூரி
வளமலிந் தோங்கிய என்றும்
வாழ்க! வாழ்க!! வாழ்க!!!
வளரிள மதியெனவே
வாழிய எங்கள்கல் லூரி (போற்றி)

*Best Wishes from*



ONGOING PROJECT
No. 34, Rudra Mw
**COLOMBO 06**

LAND MAARK
ENGINEERING (PVT) LTD

UPCOMING PROJECT
No. 57, Railway Avenue
**NUGEGODA**

ONGOING PROJECT
No. 46B, Indrajothi Mw
**MT. LAVINIA**

UPCOMING PROJECT
No. 05, Vidyalaya Road
**MT. LAVINIA**

ONGOING PROJECT
No. 15, Gregory's Road
**DEHIWALA**

FOR BOOKINGS

**0773 48 58 28**
**0773 25 22 92**
**0773 47 57 47**

**14 YEARS EXPERIENCE IN CONSTRUCTION**

No. 27, Rudra Mawatha, Colombo 06, Sri Lanka.
www.facebook.com/landmaarkinfo
apt@landmaark.com
www.landmaark.com


FOR YOUR COMPLETE

# HARDWARE NEEDS

Importers, Wholesalers & Representative of Steel Products,
Retailers of General Hardware



- Steel Corporation QT Bars, G I Pipes & G I Tubes
- M S Channel, M S Sheets & Plates
- M S Chequred Plate, M S Coil
- Round Tube, Roofing Felt
- Steel Tube, Square Iron
- Tor Steel, Welded Mesh
- Welding Electrodes, Zinc Coated Sheets
- Angle Iron, G I Pipes-Heavy, Light & Medium
- B I Sheets, B S Shafting
- Barbed Wire, Carbide
- Cement Colour, Flat Iron
- Furniture Tubes, Gate Channels
- G I Wire, Aluminium Sheets
- H Iron, Hoop Iron
- Hard Board, Jumper Steel
- Lip Channel, G I Plain & Roofing Sheets
- Wire Nail, Shovel & Other Tools



Tel: 239 2223- 4, 243 4046, 243 7651 Fax: 011 233 7940

## KARUNA STEEL

**369 A & 372., Old Moor Street, Colombo 12.**

Stores: 388, Sri Sangaraja Mawatha, Colombo 10.

Web: www.karunasteel.com E-mail: info@karunasteel.com

DESIGNED & PRINTED BY UNIE ARTS (PRIVATE) LTD., COLOMBO 13. TEL: 011233019F